விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஸூ மாசி மீ 28-ம் உ | திங்கட்கிழமை | (12 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 14 | ஓசை 22

## மற்றவர் கையால் கொல்லப் படுவதை நான் விரும்பவில்லை

-: பெருமாள்

(திருகோணமலை)

என் முன்னால் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று காட்டுக்குள் புகுந்து இராணுவப் பயிற்சி பெற்று கொரில்லா வாழ்க்கை நடாத்தலாம். அல்லது வெளிநாடு சென்று எமது இலட்சியத்துக்காகப் போராட்டத்தை தொடரலாம். இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ராயிட்டர் நிருபருக்குத் தெரிவித்தார்,

''நான் பைத்தியக்காரனல்ல, மற்றவர் கையால் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை'' என்றார் பெருமாள்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்திற்கு மக்களும், பொருளாதாரமுமே துணை

- ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை போராட்டத்தில் நாம் எமது மக்களையும், அவர்களின் பொருளாதாரத்தையும் துணையாகக் கொண்டே போராடி வருகிறோம். இப்படிப்பட்ட இந்தியாவிற்கு எதிரான போராட்டத்தினால், இந்திய வல்லரசின் சுயரூபம் வெளிப்பட்டது.

நேற்று இரவு நாவாந்துறையில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது. வலிகாமப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் இந்தியாவிற்கோ, இந்திய அரசுக்கோ எதிரானவர்கள் அல்ல! எம்மையும், எமது மக்களையும் அழிக்க வருகிறவர்களுக்கு நாம் எதிரானவர்கள்.

நாட்டுக்கோ, வீட்டுக்கோ உதவாத ஊரைக் கெடுக்கின்ற துரோகக் கும்பல்களைக் கொண்டுவந்து எமது போராட்டத்தை நசுக்க இந்திய அரசு தீர்மானித்தது. அது முடியவில்லை.

விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி பாரதி பேசும்போது,

எமது போராட்ட வரலாறு கண்ணீராலும், இரத்தத்தாலும் எழுதப்பட்டது. ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு எதிராகப் போராடிய வேளையிலும் சரி. இந்திய இராணுவத்திற்கெதிராகப் போராடிய வேளையிலும் சரி நாம் எமது மண்ணையும், மக்களையும் நினைத்துக் கொண்டே போராடினோம்.

பழைய நம்பிக்கைகள் எமது சமுதாயத்தில் பெண்களைப் போராட விடாமல் தடுக்கின்றன. இந்த நிலை மாறவேண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பொறுப்பாளர் காயம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பொறுப்பாளர் விபத்தில் சிக்கி காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று முன்தினம் வானில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக அவ்வான் தந்திக் கம்பத்தில் மோதியதில் மேற்படி விபத்து இடம் பெற்றது.

தற்போது இவரது உடல் நிலை தேறிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# பத்மநாபாவும் ஒரிஸா போனார்!

## இரு அமைச்சர்கள், பத்து உறுப்பினரும் சென்றனர்

(புவனேஸ்வர்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) யின் தலமைச் செயலாளர் கே. பத்மநாபா, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் இரண்டு அமைச்சர்கள், பத்து உறுப்பினர்கள் உட்பட இருநூற்றி தொண்ணூற்றாறுபேர் இந்திய விமானப்படை விமானமொன்றில் நேற்று ஒரிஸா மாநில தலைநகரான புவனேஸ்வர் சேர்ந்தனர்.

திருகோணமலையிலிருந்து இருநூற்றித் தொண்ணூற்றாறு தமிழர்கள் நேற்று இந்திய விமானப்படை விமானமொன்றில் ஒரிஸா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வருக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



ஈ. பி. ஆர். எல். எவ். தலைமைச் செயலர் கே. பத்மநாபா, வடக்கு - கிழக்கு மாகாணசபை அமைச்சர்கள் இருவர், மாகாண சபை உறுப்பினர்கள் பத்துப்பேர், இரு

இங்கிருந்து இவர்கள் கோறாக் பூர் மாவட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள இரண்டு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் ஏற்கனவே திருகோணமலையிலிருந்து ஆயிரத்து முந்நூறு பேர் இரண்டு கப்பல்களில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இவர்களும் இந்த முகாம்களிலேயே இப்பொழுது தங்கியுள்ளனர்

அடம்பனில்

# "தீய சக்திகள் எம்மை பிரிக்க பார்கின்றன"

- மகேந்திரராசா

(மன்னார்)

தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள தீய சக்திகளும், அந்நிய சக்திகளும் எம்மைப் பிரித்து வைக்க முயற்சித்தனர். ஆனால் அவை வெற்றியளிக்கவில்லை என மன்னார் எருக்களம்பிட்டி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற



# பிரிக்க பார்கின்றன”

- மகேந்திரராசா

(மன்னார்)

தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள தீய சக்திகளும், அந்நிய சக்திகளும் எ-மைப் பிரித்து வைகக முயற்சித்தனர். ஆனால் அவை வெற்றியளிக்கவில்லை என மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்சுரேஸ் தலைமைதாங்கினார். இச் கூட்டத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் மகேந்திரராசா தொடர்ந்து பேசுகையில் கடந்த 14 வருடகாலப் போராட்டத்தில் நாங்கள் அரசியற் கட்சியாக அங்கிகரிக்கப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்தார். மேலும் பேசுகையில் கடந்தகாலத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் தற்சமயம் பேணிவந்ததுபோன்று எதிர்காலத்திலும் ஒற்றுமையைக் கட்டிக்காக்க தமிழ் முஸ்லிம் மக்கள் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய சுரேஸ் பேசுகையில் இரண்டுவருட தலைமறைவு வாழ்க்கையில் இருந்து நாம் தலை நிமிர்ந்து வருவதற்கு எமது மக்களின் ஆதரவும், தீரம் செறிந்த எமது இளைஞர்களின் போராட்டமுமே காரணம் எனத் தெரிவித்தார்.


சட்டத்தரணி அயூப் பேசுகையில் நாங்கள் மந்திரிகளை வரவேற்கிறோம். அரசியல்வாதிகளை வரவேற்கிறோம். தற்பொழுது தான் விடுதலை வீரர்களான விடுதலைப் புலிகளை வரவேற்கிறோம் என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் முஸ்லிம்கள் தமிழருடன் இணைந்து வாழும் சக்தியாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி பேசுகையில் எமது கட்சியின் பிரதான கொள்கை தமிழ் முஸ்லிம் மக்களின் சுயாட்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உழைத்தலே என்றார்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) யின் தலமைச் செயலாளர் கே. பத்மநாபா, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் இரண்டு அமைச்சர்கள், பத்து உறுப்பினர்கள் உட்பட இருநூற்றி தொண்ணூற்றாறுபேர் இந்திய விமானப்படை விமானமொன்றில் நேற்று ஒரிஸா மாநில தலைநகரான புவனேஸ்வர் சேர்ந்தனர்.

திருகோணமலையிலிருந்து இருநூற்றித் தொண்ணூற்றாறு தமிழர்கள் நேற்று இந்திய விமானப்படை விமானமொன்றில் ஒரிஸா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வருக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



ஈ. பி. ஆர். எல். எவ். தலைமைச் செயலர் கே. பத்மநாபா, வடக்கு - கிழக்கு மாகாணசபை அமைச்சர்கள் இருவர், மாகான சபை உறுப்பினர்கள் பத்துப்பேர், இருபத்தொன்பது பெண்கள், இருபத்தைந்து குழந்தைகள் உட்பட இருணூற்றி தொண்ணூற்றாறுபேர் இந்த விமானத்தில் புவனேஸ்வர் போய்ச் சேர்ந்தனர் விமான நிலையத்திலிருந்து இவர்கள் நகரிலுள்ள இடைவெளி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்

இங்கிருந்து இவர்கள் கோறாக் பூர் மாவட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்குக்கென அமைக்கப்பட்டுள்ள இரண்டு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் ஏற்கனவே திருகோணமலையிலிருந்து ஆயிரத்து மு நூறு பேர் இரண்டு கப்பல்களில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இவர்களும் இந்த முகாம்களிலேயே இப்பொழுது தங்கியுள்ளனர்

## அடம்பனில் பொதுக்கூட்டம்

(மன்னார்)

இன்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரின் பொதுக் கூட்டம் ஒன்று அடம்பனில் நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. இதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா, செயலாளர் யோகி, காசியானந்தன் ஆலோசகர் கலந்து கொள்வார்கள் எனவும் தெரியவருகின்றது.

## யாழ், ஆஸ்பத்திரியில்

# நான்கு எக்ஸ்ரே கருவியில் ஒன்றே இயங்குகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் பலவருட காலமாக இயங்காதிருக்கும் எக்ஸ் கதிர் இயந்திரங்களை திருத்த முடியாத நிலையில் இருப்பதாக யாழ். வைத்தியசாலை நிர்வாக அதிகாரி தெரிவித்தார.

இந்த எக்ஸ் கதிர் இயந்திரங்களைத் திருத்துவதற்கு 1983 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு கொழும்பிலிருந்து நிபுணர்கள் அனுப்பப்பட்டு வந்தனர். ஆனால் கடந்த ஏழு வருடங்களாக எவரும் அனுப்பப்படுவதும் இல்லை. இயந்திரங்கள் திருத்தப்படுவதும் இல்லை என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நான்கு எச்ஸ் கதிர் இயந்திரங்கள் இயங்கி வந்தன. இவற்றில் மூன்று பழுதடைந்த நிலையில் அங்கங்கே உறங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரேயொரு இயந்திரம் மட்டுமே இயங்கி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களுக்கு முன் கொழும்பு அதிகாரி

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் அனுமதிக்காதது வருத்தமளிக்கின்றது

- ஜனார்ததன்

(சென்னை)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து வரும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களைத் தமிழ் நாட்டுககு வருவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தன், தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளார்.

திருகோணமலையிலிருந்து அண்மையில் கப்பல்கள் மூலம் வந்தவர்களைச் சென்னையில் இறங்க அனுமதி மறுக்கப்பட்டதையடுத்தே அவர் இவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சடலங்களை பொலிஸ் பொறுப்பேற்க வேண்டும்

-- பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் தத்தமது பகுதிகளில் காணப்படும் சடலங்களை பொறுப்பேற்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் திரு. ஏனஸ்ட் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அவர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச வி. பி. சிங் விருப்பம்

-- அன்ரன் பாலசிங்கம்

(மட்டக்களப்பு)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி விட்ட தவறுகள் தொடர்பாக இறு வி. பி. சிங் அரசு கவலை கொண்டுள்ளது. எம்மிடம் பேச வி. பி, தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி மூலம் எமது கருத்தைக் கேட்டுள்ளார். இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பு அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மட்டக்களப்பில் தெரிவித்தார்.

நாம் இந்திய மக்களுக்கு எவ்வகையிலும்எதிரிகளல்லர். ஆனால், ராஜீவ் காந்தியின் வெளிநாட்டுககொள்கைக்குத் தான் நாம் எதிரானவர். இந்திய மக்கள் எமது போராட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு தரவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசபடை இனி எம்முடன் மோதாது. இதை அரசாங்கம் பல தடவைகள் உறுதியளித்துள்ளது என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

தலைவர் கோ. மகேந்திரராஜா (மாத்தயா) பேசும்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளையைக் கண்ட சிறுமியைக் கொல்ல முயற்சி

(நெடுங்கேணி)

கொள்ளைச் சம்பவத்தை நேரில் கண்ட ஆறு வயதுச் சிறுமியை கழுத்து நெரித்து கொல்ல முயன்ற பெண்மணி விடுதலைப் புலிகளின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நெடுங்கேணி கோவிற்புளியங்குளம் கிராமத்தில் வீடொன்றில் வீட்டார் இல்லாத நேரம் நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த இப்பெண்ணை திடீரென அங்கு வந்த வீட்டுச் சிறுமி கண்டு விட்டார்.

உடனே சிறுமிக்கு விளாம்பழம் தருவதாகக் கூறி காட்டுப்பகுதிக்குஅப்பெண் அழைத்துச்சென்றார். அங்கே சிறுமியின் கழுத்தை நெரித்தார். சிறுமி மயங்கி விழவே, இறந்துவிட்டதாக கருதி அப்பெண் போய்விட்டார்.

சிறுமியின் பெற்றோர் சிறுமியைக்காணாது தேடவே கழுத்து வீங்கிய நிலையில் அச்சிறுமி மயங்கி கிடந்ததைக் கண்டனர்.

நெடுங்கேணி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுமி பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுமியின் தகவல்களையடுத்து கொள்ளையடித்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளருக்கு மரண தண்டணை

(பக்தாத்)

ஈராக்கில் உளவு வேலைகளில் ஈடுபட்டதற்காக பிரிட்டிஷ் பத்திரிகையாளர்ஒருவருக்கு ஈராக் நீதிமன்றம் மரண தண்டணை விதித்துள்ளது,

இவரது மரண தண்டணையை மறுபரிசீலனை செய்யுமாறு பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட் தாட்சர் ஈராக் அரசிடம் கோரியுள்ளார்.

# இம்மாத இறுதிக்குள் படை முற்றாகப் போய்விடும்

- வி. பி. சிங்.

(புதுடில்லி)

இந்திய அமைதிப்படை இம்மாத இறுதிக்குள் இலங்கையிலிருந்து முற்றாக வளியேறிவிடும் என்று இந்தியப் பிரதம மந்திரி திரு. வி. பி. சிங் மீண்டும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற நூறு நாட்களுக்குள் அயல் நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்தியிப்பதாகவும் பிரதமர் வி. பி சிங் தெரிவித்தார். இந்தியா ஆதிக்கம் செலுத்துகிறதென்ற பீதியை அயல் நாடுகள் மத்தியிலிருந்து நீக்க முயற்சி மேற்கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தனிச்சீனியில் அரைத்த 'ஐசிங் சுகர்' எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M. 777, K. K. S. Road, Jaffna. (B/67)

### றோனியோ

தரமான றோனியோ பிரதிகளை தாமதமின்றி பெற்றுக்கொள்ள நம்பிக்கை நிறுவனம் 'கிளீன் கட்'

### வரப்பு

Radio Tv, Air Conditioning-Refregeration வயறிங், வெல்டிங், வைன்டிங், Typing. Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)


# நோயாளர் நலன்புரிச் சங்கம் மீண்டும் நோயாளர் சேவையில்!

(யாழ்ப்பாணம்)

அரச உதவிகள் மறுக்கப்பட்ட காலகட்டத்தில் நோயாளர் தொகை அதிகரித்தும், மருத்துவ வசதிகள் குறைந்தும், இறப்பு வீதம் கூடியும், பிறப்பு வீதம் குறைந்தும் மக்கள் நோயின் பிடியில் இருந்து மரணம் தான் எமது முடிவுவென ஏங்கித் தவித்த காலத்தில், நோயாளரின் நலனில் அக்கறையுடன் இயங்க வேண்டிய சூழ்நிலையை அறிந்துதவ முன்வந்தமையே நோயாளர் நலன் புரிச் சங்கம் எனப் பரிணமித்தது.

நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்திய சாலையின் முன்புற வாசலோடு அமைந்த கட்டிடத்தில், அதற்கான ஆளணியுடன் நோயாளரின் தேவையை உணர்ந்து, உதவி செய்யத் தயாராகியது. மேற்படி சங்கமானது பல்வேறு சேவைகளை ஆற்றி வந்தது. சேவைகள் விபரம் வருமாறு:

1. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர் தமது நோய் முற்றாகக் குணமடைந்து வீடு செல்லும்வரை அவர்களின் குடும்ப நிலை, வசதிகள் என்பவற்றிற்கு ஏற்ப உதவிகளை வழங்குதல்.

2. நோயாளரின் மனதைக் கவர்ந்து, திருப்தியுடன்குணம் பெற்றுச் செல்ல வைத்திய சாலையை அழகுபடுத்துதல்,

3. வசதியற்ற, உதவியற்ற நோயாளர்கள் குணமானதும் வீடுசெல்ல வசதிகள் செய்து கொடுத்தல்.

4. ஆதரவற்ற நோயாளர்களது சிகிச்சைக்குப் பல்வேறு நிலைகளில் உதவுதல்.

5. நோயாளர்களின் குறைநிறைகளை நேரில் கண்காணித்து அறிந்துதவுதல்.

6. ஊனமுற்றவர்களுக்குப் புனர்வாழ்வு நிலையமும் வேலைவாய்ப்பும் வழங்குதல்.

7. புற்று நோயாளர்கள் மகரகம செல்லத் தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல்.

8. இரத்த வங்கியின் நிலைமையை அறிந்து, தேவையான இனக்குருதிகளைப் பொது இடங்களில் இரத்த வங்கிகள் அமைத்து, இரத்தங்களைச் சேகரித்து வழங்கல்.

9. நோயாளர்களுக்கு இரவு - பகல் சேவை மற்றும் தேவையான பொருட்களை நியாயமான விலையில் விற்றல்.

10. குடிபோதைக்கு உட்பட்டவர்களுக்குப் புனர் வாழ்வு வழங்குதல்.

மேற்படி சங்கத்தினது சேவைக்காகப் பல்வேறு உள்ளூர் பொது ஸ்தாபனங்களும், மதஸ்தாபனங்கள், வெளிநாட்டுப் பொது ஸ்தாபனங்களும் உதவி வந்தன. மேலும் கடந்த இரண்டு வருடகாலங்களின் போது ஏற்பட்ட இராணுவ நடவக்கைகளினால் எமது சங்கத்தின் சேவைகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இச்சேவைகளை நாம் மீண்டும் செய்வதற்கு உத்தேசித்திருப்பதால் இதற்குத் தங்களின் உதவிகள் தேவைப்படுகின்றன.

கூட்டத்தில் இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பலர் உரையாற்றினர்.

## புதிய கழகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் ரோட்டறிக் கழகம் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் இன்ரறக்ற் கழகம் ஒன்றை ஆரம்பித்து வைத்துள்ளது.

மேற்படி ரோட்டறிக் கழக தலைவர் திரு. வி. சிவநாதன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

ரோட்டறிக் கழகத்தின் சேவையைப் பகிர்ந்துகொள்வதற்காகக் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 9 ஆவது கழகம் இதுவாகும்.

## பரதக் கலை வளர்ப்பதில் மட்டக்களப்பு முன்னணியில்

(மட்டக்களப்பு)

பாரம்பரிய கலைகளைப் பேணிப் பாதுகாக்கும் மட்டக்களப்பு பிரதேசம் பரதக் கலையை வளர்ப்பதிலும் ஏனைய பிரதேசங்களைப் போல் முன்னணியில் திகழ்கிறது.

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மட்டக்களப்பு தலைமையக உதவி அரசாங்க அதிபர் இரா. நாகலிங்கம் (அன்புமணி) குறிப்பிட்டார்.

திருமதி சுபத்திரா கிருபாகரனின் மாணவிகளின் அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு கலாசார உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மனசிங்கம் தலைமை தாங்கினார்.

திரு. இரா. நாகலிங்கம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் திருமதி. சுபத்திரா கிருபாகரனின் மாணவிகளின் நடன நிகழ்ச்சி தொலைக்காட்சியில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளின் முன்னணித்தரத்திற்கு வளர்ந்திருக்கிறது. கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியற்ற சூழ்நிலை நிலவினாலும், கலையை வளர்ப்பதில் இப்பிரதேசம் பின் நிற்கவில்லை என்றார்.

இந்நிகழ்ச்சியின்போது வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா மாநகரசபை ஆணையாளர் திரு. எஸ். கார்த்திகேசு ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (39)

## ஏட்டுக்கல்வியும் உடற்கல்வியும் மாணவருக்கு மிக அவசியம்

(சாவகச்சேரி)

''ஏட்டுக்கல்வி உடற்கல்வி இந்த இரண்டும் மாணவ சமுதாயத்தின் இரு கண்களைப் போன்றவை. ஆகவே மாணவ சமுதாயம் தமது மாணவப் பராயத்திலேயே இந்த இரண்டையும் பேணி வளர்ப்பதின் மூலமே அவர்கள் எதிர்காலத்தில் ஒளிமயமான கல்வி வளத்தையும், உடல் வளத்தையும் கொண்ட, சிறந்த நாட்டு வளத்தைப் பெருக்கும் சமுதாய சிற்பிகளாக வளர முடியும்.

இவ்வாறு யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். வி. மகேஸ்வரவேல் சந்திரபுர ஸ்கந்தவதரோதய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்ச் செயல்திறன் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போது கூறினார்.

வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கந்தர், அருணாசலம், நடராஜா, காசிநாதர் இல்லங்களுக்கிடையில், கொத்தணி அதிபர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய அவர். போட்டி காலங்களில் மட்டும் தான் பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையை மாணவர் விடுத்து உடல் பயிற்சிகளை மாணவர் தினமும் மேற்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நோயற்ற பெரு வாழ்வையும் மாணவர் சமுதாயம் பெற்று வளமாக வாழ முடியும் என்றும் அவர் சொன்னார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. என். ரஞ்சன் உட்பட பலர் பேசினர். (35)

## ஊழியர் நலன் புரிச் சங்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பணிபுரியும் ஊழியர் இணைந்து ஊழியர் நலன்புரிச் சங்கம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

இதன் தலைவராக உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளையும், செயலாளராக பிரதமலிகிதர் திரு. ஏ. இராசையாவும், பொருளாளராக கிராமசேவை அலுவலர் திரு. ரீ. இரத்தினராஜாவும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (35)

## பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழும், ரொக்கமும்

(தீவுப்பகுதி)

யாழ். செஞ்சிலுவைச் சங்கமும். பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துமுகமாக நடாத்தப்பட்ட பனைஓலை கைத்தொழில் பயிற்சியில் பயிற்சிபெற்ற வேலணையைச் சேர்ந்த முப்பது யுவதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சான்றிதழ்களையும், தொழில் ஆரம்பிப்பதற்கு தலா ஐநூறு ரூபா ரொக்கப் பணத்தையும் வழங்கியுள்ளது. ஐநூறு ரூபா ரொக்கமாக வழங்கும் வைபவம் வேலணை கற்பகம் விற்பனை நிலையத்தில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணைப் பிரதிநிதியும் இளைப்பாறிய அதிபருமாகிய திரு. செ. வரதலிங்கத்தினால் வழங்கப்பட்டது. மேலு இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட முப்பது யுவதிகளுக்கும் பனைஓலை சீவும் கருவியும், சத்தகம். கத்தி என்பனவற்றை பனை அபிவிருத்திச் சபை இலவசமாக வழங்கி ஊக்குவித்துள்ளது. (15)


80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(சலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை


## கசிப்பை ஒழிக்க நடவடிக்கை

(புங்குடுதீவு)

தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 'புங்குடுதீவு கிளை' இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கசிப்பு உற்பத்தியினால் சீவல் தொழிலாளிகளின் வருமானம் பாதிக்கப்படுவதுடன் அவர்களின் குடும்பங்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் கசிப்பை

## மாவட்ட விவசாய பணிப்பாளர் வேண்டுகோள்

# சிறு குளங்களில் உள்ள நீரை பயன்படுத்தி ... செய்கையில் ஈடுபடுங்கள்

# பிரபாகரனின் வழிகாட்டலில் தமிழ்மக்கள் அணிதிரள வேண்டும்

## தீவுப்பகுதி கூட்டத்தில் பேச்சு

(தீவுப் பகுதி)

இதுவரை காலமும் எமது தமிழீழப் போராட்டத்தில்

...யிருக்கின்றது. எமது மக்களின் நிரந்தரவிடிவிற்காக எமது தலைவர் திரு. பிரபாகரனின் வழிகாட்டலில்

...குறிப்பிட்டார்.

மண்கும்பான் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்

சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

## கசிப்பை ஒழிக்க நடவடிக்கை

(புங்குடுதீவு)

தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 'புங்குடுதீவு கிளை' இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. சசிப்பு உற்பத்தியினால் சீவல் தொழிலாளிகளின் வருமானம் பாதிக்கப்படுவதுடன் அவர்களின் குடும்பங்கள் பல்வேறு சஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் கசிப்பை பாவிக்கும் குடிகாரரினால் வீதிகளில் ஏற்படும் வீண் சண்டை சச்சரவுகள் போன்ற தொல்லைகளைப் பற்றி பொதுமக்களின் புகார்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாசத் தெரிய வருகிறது. (22)

## ஆஸ்பத்திரி ஆலயம் புனர் நிர்மாணம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை ஞானவைரவர் ஆலயம் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டு, புனர்நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது.

மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, பிராயன்பற்று, வடலியடைப்பு, ஆகியவற்றை சேர்ந்த மக்கள் இதற்கான நிதியுதவிசள் செய்துள்ளனர்.

இருபதினாயிரம் ரூபாவிற்கு திட்டமிட்டு செய்யப்படும் புனர்நிர்மாணவேலைக்கு இன்னும் நிதி போதாமல் இருப்பதால் அன்பர்களிடம் மேலும் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் ரோட்டறிக் கழகம் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் இன்ரறக்ற் கழகம் ஒன்றை ஆரம்பித்து வைத்துள்ளது.

மேற்படி ரோட்டறிக் கழக தலைவர் திரு. வி. சிவநாதன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

ரோட்டறிக் கழகத்தின் சேவையைப் பகிர்ந்துகொள்வதற்காகக் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 9 ஆவது கழகம் இதுவாகும்.

கிறது.

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மட்டக்களப்பு தலைமையக உதவி அரசாங்க அதிபர் இரா. நாகலிங்கம் (அன்புமணி) குறிப்பிட்டார்.

திருமதி சுபத்திரா கிருபாகரனின் மாணவிகளின் அரங்கேற்ற நி'ழ்ச்சிக்கு கலாசார உதவிப்பணிப்பாளர் திரு.

காட்சியில் இடம்பெறும் நடன நிகழ்ச்சிகளின் முன்னணித்தரத்திற்கு வளர்ந்திருக்கிறது. கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியற்ற சூழ்நிலை நிலவினாலும், கலையை வளர்ப்பதில் இப்பிரதேசம் பின் நிற்கவில்லை என்றார்.

இந்நிகழ்ச்சியின்போது வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா மாநகரசபை ஆணையாளர் திரு. எஸ். கார்த்திகேசு ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (39)

படுத்துமுகமாக நடாத்தப்பட்ட பனைஓலை கைத்தொழில் பயிற்சியில் பயிற்சிபெற்ற வேலணையைச் சேர்ந்த முப்பது யுவதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சான்றிதழ்களையும், தொழில் ஆரம்பிப்பதற்கு தலா ஐநூறு ரூபா ரொக்கப் பணத்தையும் வழங்கியுள்ளது. ஐநூறு ரூபா

இளைப்பாறிய அதிபருமாகிய திரு. செ. வரதலிங்கத்தினால் வழங்கப்பட்டது. மேலு இப்பயிற்சி வகுப்பில் சலந்து கொண்ட முப்பது யுவதிகளுக்கும் பனைஓலை சீவும் கருவியும், சத்தகம், கத்தி என்பனவற்றை பனை அபிவிருத்திச் சபை இலவசமாக வழங்கி ஊக்குவித்துள்ளது. (15)


(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)

10-30, 2. 30, 6. 30

கமலஹாசன் -- சுஜாதா

அவள் ஒரு தொடர்கதை


## மாவட்ட விவசாய பணிப்பாளர் வேண்டுகோள்

# சிறு குளங்களில் உள்ள நீரை பயன்படுத்தி உப உணவு செய்கையில் ஈடுபடுங்கள்

(நெடுங்கேணி)

வவுனியா மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சிறு குளங்களின் கீழ் உள்ள நெற்காணிகள் இக்கால போகத்தில் செய்கை பண்ணப்படாது தரிசாக விடப்பட்டுள்ளன. இக் குளங்களிலுள்ள நீரின் அளவு எதிர்வரும் சிறுபோகத்தின் போது நெற் செய்கையைமேற்கொள்வதற்கு போதுமானதாக இல்லை.

எனவே இக்குளங்களில் உள்ள நீரைப் பயன்படுத்தி இந்நிலங்களில் உப உணவுப் பயிர்களான கௌபீ, பயறு, போன்றவற்றைச் செய்கை பண்ணுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

இவ்வாறு வவுனியாமாவட்ட விவசாய உதவி பணிப்பாளர் திரு. அ. கிருஷ்ணன் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களிலும் நெல் அறுவடையை அடுத்து இருக்கும் ஈரத்துடன் உடனடியாக கௌபீ, பயறு ஆகியவற்றை விதைப்பதால், குளங்களிலுள்ள குறைந்தளவு நீருடன் பயிர்ச் செய்கையை வெற்றிகரமாகமேற்கொள்ளமுடியும்.

பல உணவுப் பொருட்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் நீக்கப்பட்டுள்ளதால் அவற்றின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இவ் உணவுப் பொருட்களுக்குப் பதிலாக கௌபீ, பயறு போன்றவை உபயோகிக்கப்பட முடியுமாதலால் இவற்றிற்கு எதிர்காலத்தில் விலை வாய்ப்பு அதிகமாகும். அத்துடன் இப் பயிர்களின நீர்த் தேவையும் குறைவாகும்.

கௌபீ, பயறு போன்றவை விதைப்பதற்கு ஏக்கருக்கு வீச்சு விதைப்பாயின் 12கிலோ கிராமும், வரிசை விதைப்பிற்கு 10 கிலோ கிராமும் போதுமானது. பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் மொத்தச் செலவு ஏறத்தாள 4000/- ஆகும். சிறப்பான முறையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதன் மூலம் ஏக்கருக்கு 500 கி. கி உற்பத்தி பெற்று நிகர இலாபமாக 6 000/- வரை சம்பாதிக்க முடிகிறது.

அத்துடன் இந்தப் பெரும் போகத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள நெல் வயல்களில் மஞ்சளடைதல் நோய் தென்படுவதால் மண்ணில் பொற்றாசுக் குறைவிற்கு உடனடியாக ரீ. டி. எம் உடன் மேலதிகமாக 8 கி. கி. பொற்றாக உரத்தை மண்ணிற்கு இடுமாறும் அவர் வேண்டியுள்ளார்.

## யானைகள் அட்டகாசம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணிப் பகுதியில் இப்பொழுது யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. அண்மையில் நெடுங்கேணி வயல் வெளியில் நெற்பயிர்களை அழித்ததுடன் ஊவிற்குள் புகுந்து வாழை, தென்னைகள் ஆகியவற்றையும் அழித்துள்ளன.

# பிரபாகரனின் வழிகாட்டலில் தமிழ்மக்கள் அணிதிரள வேண்டும்

## தீவுப்பகுதி கூட்டத்தில் பேச்சு

(தீவுப் பகுதி)

இதுவரை காலமும் எமது தமிழீழப் போராட்டத்தில் ஆயிரத்தி முன்னூற்றி ஐம்பத்தி மூன்று போராளிகளையும், இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட மக்களையும் இழந்துள்ளோம். இவர்களது தியாகத்தினால் தான் அமைதியான சூழல் தோன்றியிருக்கின்றது. எமது மக்களின் நிரந்தரவிடிவிற்காக எமது தலைவர் திரு. பிரபாகரனின் வழிகாட்டலில் அனைத்து தமிழ் மக்களும் அணிதிரள வேண்டும்.

இவ்வாறு மண்ரும்பானில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கூட்டத்தில் உரையாற்றிய திரு, நரேஸ் குறிப்பிட்டார்.

மண்கும்பான் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சிவலோகநாதன் இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வீ கஸ்ரோ உரையாற்றுகையில், இன்று நாம் காணும் அமைதி ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர விடிவாக இருக்கும் என்று சொல்ல முடியாது. எமது மக்கள் நிம்மதியாகவும், சுபீட்சமாகவும் வாழவேண்டுமானால் எமது தலைவனின் வழி நடத்தலில் சகல தமிழ் மக்களும் ஒன்று திரண்டு மக்கள் புரட்சியை செய்வதன் மூலமே எமது குறிக்கோளை வென்றெடுக்க முடியும். இன்று நாம் ஸ்ரீ லங்கா அரசுடன் பலம் பொருந்தியநிலையிலே பேசுகின்றோம்என்றார். (15)

## மானிப்பாய் இலங்கை வங்கியில் விரைவில் பணப் புழக்கம்

(சுதுமலை)

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் சுமார் பத்தாயிரம் பேருக்கான நிவாரணக் கொடுப்பனவுகளுக்கான பட்டியல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் பாதுகாப்பு இன்மையால் இந்தக் கொடுப்பனவுகளுக்கான பணத்தைக் கொண்டுவர முடியாமல் இருப்பதாக மேற்படி வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார்.

சாதாரண வங்கிக் கொடுப்பனவுகள் கூட காசோலைகள், வவுச்சர்கள் மூலம் தான் செய்யப்படுகின்றன. இந்த காசோலைகள், வவுச்சர்களை மக்கள் காங்கேசன்துறையில் இருக்கும் இலங்கை வங்கிக் கிளையிலேயே மாற்றிக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது வடபகுதிக்கு, வந்திருக்கும் வங்கியின் உயர் அதிகாரிகளின் ஆலோசனை பெறப்பட்டு இன்னும் ஓரிரு தினங்களில் எமது கிளையில் பணக் கொடுப்பனவுகள் செய்யக் கூடியதாக இருக்கும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார். (19)


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மக்கள் விரும்புவது

சந்திரா ஐஸ் சொக்




நாவிற்கு இனிமை தருவது

ஈழத்தே உதித்துள்ள ஈழநாதமே வாழ்க! வளர்க !!

சந்திரா

ஐஸ் கிறீம்
ஐஸ் சொக்
குளிர்பானங்கள்

108, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

B-231

# சோவியத் - அமெரிக்க உச்சி மகாநாட்டு ஏற்பாடு

(வாஷிங்டன்)

அமெரிகாவுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையிலான அடுத்த உச்சி மாநாடு தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வெயின் பேகரும், சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் செவர்தநாட்சேயும் அடுத்தமாதம் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அடுத்தமாதம் நான்காம் திகதி முதல் ஆறாம் திகதி வரையும் இவர்கள் சந்தித்துப் பேசுவார்கள்.

அமெரிக்க சோவியத் உச்சி மாநாடு எதிர்வரும் யூன் மாதம் நடைபெறும் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த உச்சி மாநாட்டில் ஆயுதக் கட்டுப்பாடு, பிராந்தியப் பிரச்சினைகள், மனித உரிமைகள், இருதரப்பு விவகாரங்கள் என்பன பற்றி ஆராயப்படும்.

இந்த மாநாட்டில் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக இரு நாடுகளும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன.

இதில் நீண்டதூர ஏவுகணைகளின் எண்ணிக்கை எண்பது தொடக்கம் ஐம்பது சதவீதம் வரை குறைக்கப்படும்.

## காஷ்மீர் செல்லாதீர் என அமெரிக்கருக்கு ஆலோசனை

(வாஷிங்டன்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு அமெரிக்கர்கள் விமானத்தில் பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அமெரிக்க பிரஜைகளுக்கு எச்சரித்துள்ளது.

தீவிரவாதிகளின் வன்முறைகளால் அமெரிக்கர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதாலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் எந்தப்பகுதிக்கும் அமெரிக்கர்கள் செல்லக் கூடாது என கடந்த ஜனவரியில் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ நகருக்கு விமானத்தில் பயணம் செய்யக்கூடாது என பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்யும் சுவரொட்டிகள் இந்தியாவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விமானக் கழிவறையில் தங்கக் கட்டிகள்

(பம்பாய்)

பம்பாய் விமானநிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எயர் இந்திய விமானத்தின் கழிவறையில் ஆறு கிலோ எடையுள்ள தங்கக்கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இதன் மதிப்பு இருபத்திநாலு லட்சத்து இருபத்தெண்ணாயிரம் ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## படை வாபஸ்

(மாஸ்கோ)

ஹங்கேரியில் உள்ள சோவியத் துருப்புக்களை வாபஸ் பெறுவதற்கு சோவியத் யூனியன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்த வருடம் மே மாதம் தொடக்கம் இரண்டு மாதங்களில் இவை நடைபெறும்.

# புரட்சிக்காரரை ஒப்படைக்குமாறு ஆப்கானிஸ்தான் கோரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா தனது தற்காப்பை சிதறவிடாமல் காபூல் நகரில் உறுதியாக காலூன்றி விட்டார் என்ற பொதுவான கருத்து வெளிநாட்டு தூதுவர்கள் மத்தியில் நிலவுவதாக பாகிஸ்தானில் இருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் ஆப்கான் வெளியுறவு அமைச்சு காபூலில் உள்ள பாகிஸ்தானிய தூதரக பொறுப்பதிகாரியை வரவழைத்து இச் சதியின் முக்கிய நபரான ஜெனரல் ஷாநாவாஸ் கனாய் மற்றொரு உடந்தையாளரான குன்பூதின் கின்மத்துடன் சேர்ந்து சதியில் இஸ்லாமாபாத் நேரடியாக பங்கேற்றது என்ற குற்றச்சாட்டை கொடுத்தது.

மேலும் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் பாகிஸ்தான் அரசும் அதன் இராணுவ உளவு நிறுவனமும் நேரடியாக பங்கு கொண்டது என்பதற்கு தக்க சான்றுகள் தம்மிடம் இருப்பதாகவும் ஆப்கான் அரசு கூறியுள்ளது.

பாகிஸ்தானுக்குத் தப்பியோடிய ஷாநாவாஸ் கனாயை தம்மிடம் ஒப்படைக்குமாறு ஆப்கான் அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

## பிராக்மன் கோப்பை அவுஸ்திரேலியாவுக்கு

(ஒக்லண்ட்)

மூன்று நாடுகளுக்கு இடையேயான கிரிக்கட் போட்டியில் அவுஸ்திரேலியா 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று பிராக்மன் கோப்பையைப் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 49. 2 ஓவர்களில் 162 ரன்களைப் பெற்றது. இதற்கு பதில் கொடுத்தாடிய அவுஸ்திரேலியா 39. 1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 16.4 ரன்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இந்தியா 3ஆவது இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இரு பலஸ்தீனியர் சுட்டுக் கொலை

(ஜெருசலேம்)

ஜெருசலேமில் கடந்த வெள்ளிக்கிழமை அரபு மக்கள் வாழும் கிழக்குப் பகுதியில் உள்ள அகதி முகாமில் நடந்த வன்முறை போராட்டங்களின் போது இரு பலஸ்தீனியர்கள் இஸ்ரேலியப் பொலிசாரினல் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் ரோந்துக் காவல் படையினரை கற்களால் தாக்கிய போதே இந்த உயிர் இழப்புக்கள் நேர்ந்ததாக பொலிசார் கூறுகின்றனர். இப் பிரதேசத்தின் நிலை குறித்து இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டே இக்கலவரங்கள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மேலும் இக் கலவரங்களை அடுத்து கிழக்கு ஜெருசலேமில் கடைகள் யாவும் மூடப்பட்டு அமைதியின்மை காணப்படுகிறது. பொலிசாரின் காவல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எந் நேரத்திலும் கலகங்கள் மூளலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## நடேஸ்வரா அதிபருக்கு கல்வியதிகாரி பாராட்டு

(காங்கேசன்துறை)

காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரிக்கு விளையாட்டுப் பாரம்பரியம் ஒன்றுண்டு. அகில இலங்கை ரீதியாக விளையாட்டுத்துறையில் அது பல முத்திரைகளைப் பொறித்துள்ளது. இப்பாரம்பரியம் தொடர்ந்தும் பேணப்பட அண்மைக்கால நெருக்கடிகள் சில ஊறுகளை ஏற்படுத்தி விட்டன.

எனினும் புதிய அதிபர் அதற்குப் புத்துயிரளித்து எடுத்துவரும் நடவடிக்கையை நான் பாராட்டுகின்றேன்: தற்போது மிகவேகமாக சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வரும் இக் கல்லூரியும் இக்கல்லூரியை மூலாதாரப்பாடசாலையாகக் கொண்டியங்கும் காங்கேசன் துறைக் கொத்தணியும் இன்று எமது கோட்டத்தில் முன்னணியில் நிற்கின்றது.

இவ்வாறு காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டத்தின் கல்வி அதிகாரி திரு எம். சிவராஜரட்ணம் கூறினார்.

அதிபர் திரு க. இராசதுரையின் தலைமையில்நடைபெற்ற இப்போட்டியில் தலைமையுரையின் போது அதிபர் பேசுகையில்,

பாடசாலையின் பழைய மாணவர்களே அதனைத் தாங்கி நிற்கும் தூண்கள், பெற்றோர்களே அவற்றின் கூரைகள், மாணவர்கள் கல்லூரியின், சொத்துக்கள் ஆசிரியர்கள் அவர்களின் வழிகாட்டிகள் இந்நான்கு வகையினரின் இணைந்த செயற்பாடே கல்லூரியின் வளர்ச்சி இந்தவகையில் எமது கல்லூரி வளர நான் கடமை ஏற்ற

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நெற் செய்கை அதிகம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 1989/90 கால பெரும்போகத்தின் போது நெல் விளைச்சல் ஏக்கருக்கு சராசரி 70 புசல் கிடைத்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 65 புசல் மட்டுமே கிடைத்தது. அதேவேளை விவசாயத் திணைக்களம் எதிர்பார்த்ததை விட அதிகமான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

81,000 ஏக்கரில் பெரும்போக வேளாண்மை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்ததை விட அதிகமாக 103256 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

சிறந்த நீர்ப்பாசனம், தரமான உள்ளூர் விதைநெல், நோய்த்தாக்கம் குறைந்தமை, போன்ற காரணங்களினாலேயே கூடிய விளைச்சலைப் பெறக்கூடியதாக இருந்தது என மட்டக்களப்பு விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (39)

## சான்றிதழ் வழங்குதல்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதி செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் புங்குடுதீவுப் பகுதிக்கான படைப் பிரிவினரால் அண்மையில் நடாத்தப்பட்ட 'போட்டிப் பரீட்சையில்' திறமைச்சித்தி பெற்ற அங்கத்தவர்களுக்கான நற்சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 18 ஆம்

## இளைகள் அமைப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதான அமைப்பாளர் திரு. ப. மூர்த்தி அவர்களும் தலைமைக் செயற்குழு உறுப்பினர் திரு.செல்கதிர் அவர்களும் பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மண்முனை மேற்கு வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் கட்கிக் கிளை அமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## நெடுங்கேணியில் இணக்க சபை

(நெடுங்கேணி)

இன்று மக்கள் மத்தியில் எத்தனையோ பிணக்குகள், பேதங்கள், பிரச்சனைகள் உள்ளன. இவை அனைத்தும் மக்களாலேயே தீர்க்கப்படல் வேண்டும்.

இவ்வாறு நெடுங்கேணி இணக்க சபையின் அங்குரார்ப்பணம் செய்து வைத்த நெடுங்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சேரன் உரை

## இளைகள் அமைப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள்

# காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஊழியர் தாமதமாக வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் தற்போது பொதுக் காப்புறுதிக் கட்டணம் அறவிடும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் வெளிக்கள உத்தியோகஸ்தர்களின் ஏஜன்ட்) வேலையை அலுவலக ஊழியர்களும், அலுவலர்களும் பார்ப்பதால் அலுவலகத்தில் வேலை நேரத்தில் ஊழியர் பற்றாக்குறைகாணப்படுகிறது.

இதன்மூலம் இடைத்தரகு வேலை பார்த்து தரகுப் பணத்தை தாம் பெற்று கொள்வதில் இந்நபர்கள் ஈடுபட்டுவது தெரிகிறது. இது சட்டமுரனானதாகும் இந்த இடைத்தரகு வேலை செய்வதற்கென்றே நியமிக்கப்பட்டுள்ள வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் (ஏஜன்டுகள்) இதனால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க அலுவலர்கள் சரியான நேரத்திற்கு அலுவலகத்தில் சமூகம் தருவதில்லை, ஒன்பது மணிக்கு பின்பே வருவதும் கவனிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அலுவலகத்தில் போதிய ஆசன வசதிகள் இல்லாத நிலை இருந்தும் இது பற்றி மேலிடத்திற்கு தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதில் அலுவலக நிர்வாகம் எதுவித கரிசனையும் கொள்ளவில்லை என்று தெரியவருகிறது. (லோ)

## இல்ல விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வள்ளுவர் இல்லம் (மஞ்சள்) முதலாமிடத்தையும், பாரதி இல்லம் (சிகப்பு) இரண்டாமிடத்தையும், கம்பர் இல்லம் (பச்சை) மூன்றாமிடத்தையும் பெற்றன. (36)

# கல்வியதிகாரி கவலை: சுயநல நோக்குடையவர்களாக

தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 65 புசல் மட்டுமே கிடைத்தது. அதேவேளை விவசாயத் திணைக்களம் எதிர்பார்த்ததை விட அதிகமான ஏக்க

பார்க்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்ததை விட அதிகமாக 103256 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

சிறந்த நீர்ப்பாசனம், தரமான உள்ளூர் விதைநெல், நோய்த்தாக்கம் குறைந்தமை, போன்ற காரணங்களினாலேயே கூடிய விளைச்சலைப் பெறக்கூடியதாக இருந்தது என மட்டக்களப்பு விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (39)

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் கட்சிக் கிளை அமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இறது.

இந்நிலையில் வெளிக்கள உத்தியோகஸ்தர்களின் ஏஜண்ட்) வேலையை அலுவலக ஊழியர்களும், அலுவலர்களும் பார்ப்பதால் அலுவலகத்தில் வேலை நேரத்தில் ஊழியர் பற்றாக்குறைகாணப்படுகிறது.

இதன்மூலம் இடைத்தரகு வேலை பார்த்து தரகுப் பணத்தை தாம் பெற்று கொள்வதில் இந்நபர்கள் ஈடுபட்டுவது தெரிகிறது. இது சட்ட முரனானதாகும் இந்த இடை

இது ஒருபுறமிருக்க அலுவலர்கள் சரியான நேரத்திற்கு அலுவலகத்தில் சமூகம் தருவதில்லை, ஒன்பது மணிக்கு பின்பே வருவதும் கவனிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அலுவலகத்தில் போதிய ஆசன வசதிகள் இல்லாத நிலை இருந்தும் இது பற்றி மேலிடத்திற்கு தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதில் அலுவலக நிர்வாகம் எதுவித கரிசனையும் கொள்ளவில்லை என்று தெரியவருகிறது. (லோ)

## சான்றிதழ் வழங்குதல்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதி சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் புங்குடுதீவுப் பகுதிக்கான படைப் பிரிவினரால் அண்மையில் நடாத்தப்பட்ட 'போட்டிப் பரீட்சையில்' திறமைச்சித்தி பெற்ற அங்கத்தவர்களுக்கான நற்சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 18 ஆம் திகதி புங்குடுதீவுசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் மேற்படி படைப் பிரிவினரால் வெளியிடப்படும் 'முதலுதவிக்கான கைநூல்' எனும் நூல் வெளியீடும் அன்றைய தினம் நடைபெறும் என தெரியவருகின்றது. (22)

## கிளைகள் அமைப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதான அமைப்பாளர் திரு. ப.மூர்த்தி அவர்களும், பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மண்முனை மேற்கு வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய இரண்டு பிரதேசங்களிலும் கட்சிக் கிளை அமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

## நெடுங்கேணியில் இணக்க சபை

(நெடுங்கேணி)

இன்று மக்கள் மத்தியில் எத்தனையோ பிணக்குகள், பேதங்கள், பிரச்சனைகள் உள்ளன. இவை அனைத்தும் மக்களாலேயே தீர்க்கப்படல் வேண்டும்.

இவ்வாறு நெடுங்கேணி இணக்க சபையின் அங்குரார்ப்பணம் செய்து வைத்த நெடுங்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சேரன் உரையாற்றினார்.

அவர் மேலும் தனது உரையில் குறிப்பிட்டதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் மிகவும் கட்டுப்பாடாக இயங்கிய தன் பலனே இன்று மக்கள் அணி எம்மை மனப்பூர்வமாக ஆதரிப்பதாகும். எமது இயக்கம் கட்டுப்பாடு இல்லாத ஒரு இயக்கமாக இருந்திருப்பின் என்றோ இயக்கம் அழிந்திருக்கும்,

தமிழினமும் அழிந்திருக்கும். எனவே, ஒவ்வொரு அமைப்பும் கட்டுப்பாடுடனும், கடமை உணர்வுடனும் செயலாற்ற வேண்டும் என்றார்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வள்ளுவர் இல்லம் (பஞ்சள்) முதலாமிடத்தையும், பாரதி இல்லம் (சிகப்பு) இரண்டாமிடத்தையும், கம்பர் இல்லம் (பச்சை) மூன்றாமிடத்தையும் பெற்றன. (36)

னராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டத்தின் கல்வி அதிகாரி திரு எம். சிவராஜரட்ணம் கூறினார்.

அதிபர் திரு க. இராசதுரையின் தலைமையில்நடைபெற்ற இப்போட்டியில் தலைமையுரையின் போது அதிபர் பேசுகையில்,

பாடசாலையின் பழைய மாணவர்களே அதனைத் தாங்கி நிற்கும் தூண்கள், பெற்றோர்களே அவற்றின் கூரைகள், மாணவர்கள் கல்லூரியின், சொத்துக்கள் ஆசிரியர்கள் அவர்களின் வழிகாட்டிகள் இந்நாங்கு வகையினரின் இணைந்த செயற்பாடே கல்லூரியின் வளர்ச்சி இந்தவகையில் எமது கல்லூரி வளர நான் கடமை ஏற்ற குறுகிய காலத்தில் பழைய மாணவர்களும், பெற்றோர்களும் அளித்த ஒத்துழைப்பு எனக்கு உற்சாகமளிதத்து என்றார்.

விளையாட்டுத்துறை செயலாளர் வி. முருகேசு நன்றி கூறினார்.

## கல்வியதிகாரி கவலை:

# சுயநல நோக்குடையவர்களாக சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள்

(சித்தங்கேணி)

கடந்த சில வருடங்களாக எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சில இடையூறுகள் இருந்தன. தற்போது ஓரளவு சுமுகநிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் உயர்கல்வி வாய்ப்புகள் கிடைக்காது விரக்தியடையும் மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கும் சரியான வழி காட்டலைத் திட்டமிடுவதற்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள் ஆகியோரும் மாணவர் அமைப்புகளும் ஒன்று கூடி ஆக்கபூர்வமானநடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை உயர்தரமாணவர் மன்றத்தின் வருடாந்த மதிய போசனவிருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன குறிப்பிட்டார்.

உயர்தர மாணவர்மன்றத் தலைவர் செல்வன் வீ ஜீவராஜன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

திரு. எஸ். தனஞ்செயன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறுயதாவது:

உயர்தர மாணவர்கள் எந்தளவிற்குப் பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொள்கிறார்களோ அந்தளவிற்குப் பாடசாலைகள் சிறப்பாக வளர்ச்சி அடையமுடியும் இத்தகைய சிறப்பான வளர்ச்சி நிலைக்கு இப் படாசாலை ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மெமோறியல் மாணவர்கள் நல்ல ஒழுக்கமும், நடத்தையும் உள்ளவர்கள், எந்தவொரு நிகழ்ச்சியையும் திறம்பட நடத்துபவர்கள், பெரிய பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டங்களுக்கு ஒரு சிலர் மாத்திரமே சமுகமளித்து வரும் இக்காலத்தில் இந்தப் பாடசாலையின் அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்ற போது சுமார் அறுநூறு பேர் சமுகமளித்திருந்தார்கள்.

வடபகுதிப் பாடசாலைகளின் வரலாற்றிலேயே இது ஒரு பெரிய சாதனையாகும் என்றார்.

## வடமராட்சியில் துக்கம் அனுட்டிப்பு

(பருத்தித்துறை)

விபத்தில் படுகாயமடைந்து காலமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மேஜர் காண்டீபனின் மரணத்தையடுத்து வடமராட்சிப் பகுதியில் வியாழக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதி சோகத்தில் மூழ்கியிருந்தது பல இடங்களில் சோக கீதங்கள் இசைத்தன. வீதிகளில் தோரணங்கள் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (25)

# வடமராட்சி கிழக்கு பகுதி

## கல்வியில் அபிவிருத்தி காண்கிறது

(வடமராட்சி கிழக்கு)

'' வடமராட்சி கிழக்கினை கல்வியில் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசமாகப் பிரகடனப் படுத்துகின்றேன் ''

இவ்வாறு வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ.வீரபத்திரன், ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநகர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

இப் போட்டி வித்தியாலய அதிபர் திரு. து இராசரெத்தின் தலைமையில் நடைபெற்றபோது தொடர்ந்து பேசிய அவர் வடமராட்சி கிழக்கினை கல்வியில் அபிவிருத்தி அடையாத பிரதேசமாக, இனிமேல் கருதத் தேவையில்லை.

இப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவிய ஆசிரிய பற்றாக்குறை, கட்டிடப் பற்றாக்குறை, ஆகியவற்றினை நிவிர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தளபாடப் பற்றக்குறையும் விரைவில் நிவிர்த்தி செய்யப்படும். எனவேதான், வடமராட்சி கிழக்கினை கல்வியில் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசமாகப் பிரகடனப் படுத்துகின்றேன். ஒரு பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களுடைய ஊக்கத்துடன், பெற்றோர்களின் ஊக்கமும் அவசியமானதாகும் என்றார்.

இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. கே. வி. இராசலிங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. வீ.எஸ்.பொன்னம்பலம் உட்பட பலர் பேசினர். (36)

# கோறளை வடக்கில்

## மக்கள் முன்னனி கருத்தரங்கு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள்இயக்கம் ஒரு அரசியல்கட்சியாகப்பதிவு செய்யப்பட்டமை எமது போராட்டத்தின் ஒரு வெற்றியாகும் என்று வி. பு. ம. முன்னணியின் பிரதான அமைப்பாளர் திரு. ப. மூர்த்தி குறிப்பிட்டார்.

கோறளை வடக்கு வட்ட அவைக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய சிற்றூர்கிளை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு திரு. மூர்த்தி குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு திரு. எஸ். பி. தலைமை வகித்தார். தொடர்ந்து பேசிய திரு. மூர்த்தி தமிழ் மக்கள் மத்தியில் எமது இயக்கம் உண்மையாகவும், நீதியாகவும் செயற்படுகின்றது நாம் பிழைகள் தவறுகள் விட்டால் அவற்றை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டும் அத்துடன் சிற்றூர்க் கிளைப் பிரதிநிதிகளாகிய நீங்கள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்து திரு. செங்கதிர் உரையாற்றும் போது கலந்து கொண்ட சிற்றூர்கிளை உறுப்பினர்களின் கடமைகள், செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்.

# சுருட்டுத் தொழிலாளருக்கு சம்பளம் அதிகரிக்க வேண்டும்

(சுதுமலை)

சுருட்டுத் தொழிலாளர்கள் மீண்டும் சம்பளவுயர்வு கோரியுள்ளார்கள். தமக்கு ஆயிரம் சுருட்டுக்கு வழங்கப்பட்டுவந்த நூற்றைம்பது ரூபாவை முதலாளிமார்கள் குறைத்துக் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். என சில தொழிலாளர்கள் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் மானிப்பாய்ப் பொறுப்பாளர் திரு ராஜனிடம் முறையிட்டுட்டுள்ளார்கள்.

திரு ராஜன் இதுபற்றிய கருத்துக் தெரிவிக்கையில் புகையிலை உற்பத்திப் பொருட்கள் கூடுதலாக நாட்டின் தென்பகுதிக்கே அனுப்பப்பட்டு சந்தைப்படுத்தப் பட்டு வந்தது. இது வரை காலமும் எமது பகுதியில் நிலைமை சீராக இருக்காததினால் போக்குவரத்து சீரற்று இருந்து பொருட்களை தென்பகுதிக்கு அனுப்புவதில் பெருந்தொகையை செலவழிக்க வேண்டியிருந்தது.

ஆனால் இப்போது நிலமை சகஜநிலைக்கு திரும்பிக் கொண்டிருப்பதால் உடனடியாக சுருட்டுத்தொழிலாளர் சங்கங்கள் கூடப்பட்டு பிரச்சனைகள் ஆராயப்பட்டு நீதியான கூலியை வழங்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தார்கள்.

## கிளிநொச்சியில் காண்டீபனுக்கு அஞ்சலி

(கிளிநொச்சி)

மேஜர் காண்டீபனின் பூதவுடல் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் கிளிநொச்சி தென்னிந்திய திருச்சபை ஆலயத்திற்கு முன்னால் மக்கள் அஞ்சலிக்கு வைக்கபபட்டது. பெரும் தொகையான மக்கள் கியூவரிசையில் தமது இறுதில் அஞ்சலியைச் செலுத்தினர்.

கிளிநொச்சி மாவட்டமே சோகமாகக் காட்சியளித்தது கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. கடைகளிலும் வீடுகளிலும் கறுத்தக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

## நெடுந்தீவில் மக்கள் முன்னணி அமைப்பு

(தீவுப்பகுதி)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பு சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவும், நெடுந்தீவு மக்களை நேரில் சந்திப்பதற்காகவும் விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி பிரிவைச் சேர்ந்த பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ், அரசியல் பொறுப்பாளர் திரு வீ கஸ்ரோ, தீவுப்பகுதி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ் ஆகியோர் சென்றிருந்தனர். (15)

## கல்வியதிகாரி நேரில் விஜயம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த, மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளான போக்கறுப்பு சீ. சீ. த. க. பாடசாலை, கேவில் அ. த. க. பாடசாலை ஆகியவற்றிற்கு வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் நேரில் விஜயம்செய்து அப் பாடசாலைகளின் தேவைகள் பற்றி கேட்டறிந்தார். (36)

# இலக்கியங்கள் விமர்சனத்திற்காக சிருஷ்டிக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

'இன்று நம்மத்தியில் நவீன இலக்கியம் படைப்பவர்கள், வாசகர்களை மறந்து விட்டு விமர்சகரை நினைத்துக் கொண்டு ஆக்க இலக்கியம் சிருஷ்டிப்பதில் ஈடுபட்டுள்ளனர் இந்த நிலை மாற வேண்டும்!

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றமல்லிகை வெள்ளிவிழா வெளியீட்டு விழாவின் இறுதியில் நடைபெற்ற இன்றைய நவீன இலக்கிய கர்த்தாக்கள் தம் சமூகக் கடமையினின்று வழுவிவிட்டனரா? என்ற தலைப்பில் நடைபெற்ற விவாத மேடையில் 'ஆம் என்ற பக்கம் நின்று கொண்டு பேசும் போது புலவர் ஈழத்து சிவானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசும் போது. எந்தவொரு எழுத்தாளனுக்கும்சமூகப் பொறுபபு வேண்டும். மக்கள் மீது பற்றுதல் வேண்டும்.

நவீன இலக்கியம் படைப்பவர்கள் சமூகத்திலிலிந்து விலகிச் செல்லக் கூடாது.

'நூறு சதவீதமுடைய குற்றமற்ற மனிதனைக் காட்ட முடியாது ஆனால் எல்லா எழுத்தாளர்களும் பூரணமில்லாதவர்கள் என்றும் கூற முடியாது. அப்படிக் கூறுவதில் எனக்கு நம்பிக்கை இல்லை?

மேற்படிவிவாத மேடையில் 'இல்லை' என்ற பக்கம் நின்று பேசும் போது எழுத்தாளர் செங்கை ஆழியான் மேற்படி தெரிவித்தார்.

உள்ளத் தூய்மையுடன் சமூகத்தை நேசிப்பவனின் இலக்கியம் என்றும் நிலைத்து நிற்கும். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தற்போது நவீன இலக்கியம் படைக்கும் அத்தனை எழுத்தாளர்களும், கவிஞர்களும் ஏதோ ஒரு விதத்தில் சமூகத்தின் மீது பற்று வைத்தே இலக்கியம் படைக்கிறார்கள்.

ஈழத்தில் சாதி, வறுமை, சீதனம் போன்ற சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து எழுதப்பட்ட சகல படைப்புகளும் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

ஆக்க இலக்கியம் படைத்து தோல்விகண்டவர்கள் விமர்சனம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். புலவர் ஈழத்து சிவானந்தன் ஒரு காலத்தில் ஆக்க இலக்கியம் படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. என்று செங்கை ஆழியான் பேசும் போது மேலும் குறிப்பிட்டார்.

இவ்விவாதமேடைக்கு தலைமை வகித்துப் பேசும் போது கம்பன் கழகத் தலைவர், திரு. ஜெயராஜ் தெரிவித்ததாவது,

இங்கு சாதி ஒழியவில்லை, சீதனப்பேய் விரட்டப்படவில்லை. வறுமை அகலவில்லை. எமது எழுத்தாளர்கள் தாம் வெளியிடும் புத்தகப் பிரதிகளை எப்படி விற்பனை செய்யலாம் என்ற சிந்தனையிலேயே லயித்திருக்கிறனர்.

இங்கு படைக்கப்பட்ட நூல்களில் மக்களிடம் எந்தக் கருத்து சென்றடைந்திருக்கிறது என்று தெரியவில்லை.

(தி)

## நல்லூர் சென் பெனடிக்ஸ் இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். நல்லூர் சென். பெனடிக்ற் றோ. க. த. வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை அருட் சகோதரி எம். லைசா (அதிபர்) தலைமையில் நடைபெற்றுள்ளது. பிரதம விருந்தினராக திரு. எம். இராமலிங்கம் (கொத்தணி அதிபர் நல்லூர்) கலந்து கொண்டார் கௌரவ விருந்தினராக அருட் திரு. இ. யோசப் அடிகளார் (பங்குத் தந்தை) கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக அருட் சகோதரர் லூர்த்து மடத்தலைவி கலந்து கொண்டு இப்போட்டியை மிகவும் சிறந்த முறையில் நடாத்தினார்கள்.

இப்போட்டியில் வெற்றி பெற்றோர்களின் விபரம் பின்வருமாறு:-

1. சிறந்த விளையாட்டு வீரன்;- செல்வன் வெ. றொசாக் (றோஷ் இல்லம்) 13 புள்ளிகள்
2. சிறந்த விளையாட்டு வீராங்கனை: செல்வி ஸ்டல்சி பிரேமினி (லில்லி இல்லம்) 11புள்ளி
3. அணிநடை:- முதலாமிடம் றோஸ் இல்லம் இரண்டாமிடம் லில்லி இல்லம்
4. அப்பியாசம் முதலாமிடம் றோஸ் இல்லம் இரண்டாமிடம் லில்லி இல்லம்
5. இல்ல அலங்காரம் முதலாமிடம் றோஸ் இல்லம் இரண்டாமிடம் லில்லிஇல்லம்
6. சிறந்த அணித் தலைவர்:- செல்வன் பா. யூலியன் டில்ஷான்
7. இல்ல நிலைமை:- முதலாமிடம் லில்லி இல்லம் 214 புள்ளிகள் இரண்டாமிடம் றோஸ் இல்லம் 209 புள்ளிகள்.

## சென்ஜோன்ஸ் 9 விக்கட்டுகளால் யாழ். கல்லூரியை வென்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ஜென்சன் 25 ஓட்டங்களையும், பாஸ்கரன் 12 ஓட்டங்களையும், ஜெனார்த்தனன் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல்

யாழ்ப்பாணக் கல்லூரி தனது 2ஆவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஜென்சன் 13 ஓட்டங்களையும், உத்தமசீலன் 14 ஓட்டங்களையும், பாரத் 29 ஓட்டங்களையும், செந்தில் 29 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பி. முரளி 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். கே. பிரசாந்தன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார் சென். ஜோன்ஸ் கல்லூரி தனது 2ஆவது இன்னிங்சில் விக்கெட்

## மாணவருக்கு உடற்பயிற்சி மிகவும் அவசியமானது

(சித்தங்கேணி)

கலை காலாசாரத் துறைகளுடன் விளையாட்டுத் துறையையும் இணைத்து வளர்க்க வேண்டும். இசை, நடனம் என்பவற்றைக் கலந்து உடற்பயிற்சிகளைச் செய்யும் போது எமது கலை காலாசாரத்துறை புதிய பரிணாமம் பெறுகிறது.

இவ்வாறு வட்டு இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். டாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் திரு. சிவானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

கடந்த சில வருடங்களாக பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்காக நடத்தமுடியாது போய்விட்டது. இந்த வருடம் வடபகுதிப் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன. தற்காலச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு மாணவர்களுக்கு உடற்பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

முதலாம் தவணையிலேயே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலங்களில் மாத்திரம் மாணவர்களுக்கு உடற்பயிற்சி வழங்குவதோடு நின்று விடாது வருடம் பூராவும் விளையாட்டு மைதானத்தில் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்றார்.

இம்முறை ஆசிரியர் பயிலுநர் தெரிவில் விளையாட்டுத் துறையில் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றவர்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்பட்டது என்றார்,

மஞ்சள் இல்லம் முதலாமிடத்தையும், பச்சை இல்லம் இரண்டாம் இடத்தையும்

## பல்கலைக் கழத்தில் நூல் வெளியீடு

''வித்துவ சிரோன்மணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்'' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. இந்நூலினை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ் சிவலிங்கராசா எழுதியுள்ளார் இந் நூல் வெளியீட்டு விழாவினை யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் ஒழுங்கு

## கலந்துரையாடல்

(தீவுப் பகுதி)

இன்று எமது இயக்கம் பலமான இயக்கமாக உள்ளது. இதனால் இலங்கை அரசு எம்முடன் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றது. எதிர்காலத்தில் தமிழ்பேசும் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு தந்து எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உதவ வேண்டும். இன்று எமது சக்திக்கு உந்துகோலாக இருப்பது தமிழ் மக்களின் தியாக சிந்தையே.

இவ்வாறு புங்குடுதீவில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றிய தீவுப் பகுதி விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் குறிப்பிட்டார்,

இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ, விடுதலை வேங்கை திரு. நரேஸ் ஆகியோர் உரையாற்றினர். புங்குடுதீவு பிரமுகர்கள் பலர் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (15)

## காணிப் பதிவகம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி காணி மாவட்ட பதிவகம் திறப்பு விழா எதிர்வரும் புதன்கிழமை 14ஆம் திகதி முற்பகல் கிளிநொச்சி மாவட்ட பதிவாளர் (அர

## முல்லைத்தீவு பிரதேசத்தில் கலை கலாசார விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் கலை, கலாசார விழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இதன் முக்கிய ஏற்பாட்டை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவு ஒழுங்கு செய்திருந்தது. விழாவில் எமது தமிழ் மக்களின் கலை கலாசாரப் பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் வகையிலும் தற்காலிக போராட்ட வரலாறுகளையும் சித்தரிக்கும் வகையிலும் மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது.

இந்த விழாவை மக்கள் முன்னணியின் கட்சிக் கொடியை ஏற்றிவைத்து, ஆரம்பித்து வைத்தவர் தென்னமரவாடியைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரமரணம் அடைந்த கப்டன மகேந்தியின் தாயார் ஆவர்.

இரண்டு நாள் தொடர்ச்சியாக நடந்த விழாவில் இறுதி நாளன்று முல்லை மாவட்டப் பொறுப்பாளர் த. திவாகர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அத்துடன் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியல், பொறுப்பாளர் கைலாஸ், முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் மனோ, வன்னிப் பிராந்தியக் கலை கலாசாரப் பொறுப்பாளர் திரு. கே.போசன், முல்லைமாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் சங்கர் (கந்தசாமி), வித்தியானந்தாக் கல்லூரி உப - அதிபர் வே. பாலசிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

முல்லைப் பிரதேச கலை கலாசாரக் குழுத் தலைவர் ந. தெய்வேந்திரம் பிள்ளை தலைமை தாங்கினார். போட்டி ரீதியாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டார்கள்.

## ஆலய உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, மடத்துவெளி அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமணியர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 26ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று, 27ஆம் திகதி திருக்கல்யாண வைபவத்துடன் உற்சவம் நிறைவுபெறும்.

## அறுபது இலட்சம் ரூபா விஸ்கிப் போத்தல்கள் கடத்தல்

அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான விஸ்கிப்போத்தல்களை இலங்கைக்குக் கடத்தி வந்த இரு கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டன.

## வருடாந்த பொதுக் கூட்டம்

இச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ம் திகதி (25-03-1990) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு- அங்கத்தவர்கள் சந்தாப் பணத்தை 24-03-1990க்கு முன் செலுத்தி தங்கள் 1990ம் ஆண்டுக்கான அறிமுக அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். கூட்டத்தில் பங்குபற்ற வரும்போது தங்கள் 1990-ம் ஆண்டுக்கான அறிமுக அட்

## சென்ஜோன்ஸ் 9 விக்கட்டுகளால் யாழ். கல்லூரியை வென்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ஜென்சன் 25 ஓட்டங்களையும், பாஸ்கரன் 12 ஓட்டங்களையும், ஜெனார்த்தனன் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளார். பி. முரளி 53 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஜெகேந்திரன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. எஸ். சுரேன்குமார் 40 ஓட்டங்களையும், கே. பிரசாந்தன் 31 ஓட்டங்களையும், ஜே. என். புவனரட்ணம் 39 ஓட்டங்களையும், ஜே. ஜெகேந்திரன் 30 ஓட்டங்களையும், எஸ். விபிஸ்னா 25 ஓட்டங்களையும், பி முரளி 17 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். ஜனார்த்தனன் 60 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், பாரத 49 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ரவீந்திரன் 92 ஓட்டங்களைக் சொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணக் கல்லூரி தனது 2ஆவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஜென்சன் 13 ஓட்டங்களையும், உத்தமசீலன் 14 ஓட்டங்களையும், பாரத் 29 ஓட்டங்களையும், செந்தில் 29 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பி. முரளி 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். கே. பிரசாந்தன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார் சென். ஜோன்ஸ் கல்லூரி தனது 2ஆவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 34 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (42)

### வருடாந்த விளையாட்டுப்போட்டி

(யாழ். விளையாட்டுநிருபர்)

யாழ். நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 12 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் திருமதி ப. சோமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்வியதிகாரி திரு. ஏ. தங்கராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளுகிறார். கௌரவ விருந்தினர்களாக திரு. அருணகிரிநாதன் உடற் கல்வி அதிகாரி, கொத்தணி அதிபர் திரு. மு. இராமலிங்கம், திருமதி ஜெகானந்தகுரு (அதிபர் நல்லூர் இந்து தமிழ் பெண் பாடசாலை) ஆகியோர் கலந்து கொள்வார்கள். (42)

டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். டாஸ் தலைமையில் நடை

### பல்கலைக் கழகத்தில் நூல் வெளியீடு

''வித்துவ சிரோன்மணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்'' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. இந்நூலினை யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ் சிவலிங்கராசா எழுதியுள்ளார் இந் நூல் வெளியீட்டு விழாவினை யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

முதலாம் தவணையிலேயே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலங்களில் மாத்திரம் மாணவர்களுக்கு உடற்பயிற்சி வழங்குவதோடு நின்று விடாது வருடம் பூராவும் விளையாட்டு மைதானத்தில் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்றார்.

இம்முறை ஆசிரியர் பயிலுநர் தெரிவில் விளையாட்டுத் துறையில் அகில இலங்கை ரீதியில் பரிசு பெற்றவர்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்பட்டது என்றார்,

மஞ்சள் இல்லம் முதலாமிடத்தையும், பச்சை இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்றுக் கொண்டன.

திரு. ஜேம்ஸ் குறிப்பிட்டார்,

இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ, விடுதலை வேங்கை திரு. நரேஸ் ஆகியோர் உரையாற்றினர். புங்குடுதீவு பிரமுகர்கள் பலர் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (15)

மகாஜ ாவை

## யாழ். கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

மகாஜனாக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் மிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி இனிங்ஸால் வெற்றியீட்டியது. யாழ்ப்பாணக் கல்லூரி அணி 227 ஓட்டங்களை 8 விக்கெட் நஷ்டத்திற்கு பெற்றுள்ளது. பாரத் மிகவும் சிறப்பாக விளையாடி 65 ஓட்டங்களையும், ஜென்சன் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளது. வீரசுதன் மிகவும் சிறப்பாக பந்து வீசி 6 விக்கட்டுகளை கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆடப் பணிக்கப்பட்ட மகாஜனாக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் மொத்தம் 133 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரஜீவன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். விஜயகுலன் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (42)

### மீண்டும் இம்முறை கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு வருட காலமாக நடைபெறாது இருந்த யாழ். மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி மாபெரும் கிரிக்கெட் போட்டி இம்மாம் இருபத்து மூன்றாம், இருபத்தி நான்காம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மத்திய கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார், (லோ)

### காணிப் பதிவகம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி காணி மாவட்ட பதிவகம் திறப்பு விழா எதிர் வரும் புதன்கிழமை 14ஆம் திகதி முற்பகல் கிளிநொச்சி மாவட்ட பதிவாளர் (அரசாங்க அதிபர்) தலைமையில் நடைபெறும்.

### அதிக நிலத்தில் மேட்டு நிலச் செய்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேட்டுநிலப் பயிற் செய்கை, கடந்த வருடத்தில் முன்னைய வருடங்களைவிட அதிகமான நிலத்தில் செய்கை பண்ணப்பட்டதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சோளன் 7500 ஏக்கரிலும், கௌபி 1350 ஏக்கரிலும், நிலக்கடலை 1900 ஏக்கரிலும், மரவெள்ளி 1500 ஏக்கரிலும், மிளகாய் 375 ஏக்கரிலும், சின்ன வெங்காயம் 1000 ஏக்கரிலும் செய்கை பண்ணப்பட்டது. விளைச்சலும் 30% அதிகரித்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (39)


### பொதுக் கூட்டம்

இச்சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ம் திகதி (25-03-1990) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு- அங்கத்தவர்கள் சந்தாப் பணத்தை 24-03-1990க்கு முன் செலுத்தி தங்கள் 1990ம் ஆண்டுக்கான அறிமுக அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். கூட்டத்தில் பங்குபற்ற வரும்போது தங்கள் 1990-ம் ஆண்டுக்கான அறிமுக அட்டையுடன் வரும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

சசிலா
ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(B.228)



B-230

'ஈழநாதம்' வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்!

தேனினும் இனிய ஐ[illegible]கிறீம், குளிர்பான வகைகள் சுவை மிகுந்த சிற்றுண்டி வகைகள், லிங்கம் ஸ்பெஷல் [illegible]ரோக்களும் பெற்றுக் கொள்ள தவறாது விஜயம் செய்யுங்கள்.

# லிங்கம் கிறீம் ஹவுஸ் அன் கூல் பார்

52, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(B. 282)

## சிந்தனைக்கு

நாடு காண்பதற்கே - உனக்கு
ஞானஞ் சிறிதுமுண்டோ?
வீடுகனக்கப் போடா - அடிமை
வேலை செய்யப் போடா

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 12 - 03 - 90

# தொல்லை வேண்டாம் ஆளை விடு

"ஆயுதம் ஏந்திய ஈழப் போராளிக் குழுக்களுக்கு இனித் தமிழ் நாட்டில் இடமில்லை" என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை சமீபத்தில்கூட ஈழத்திலிருந்து வந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்குப் புகலிடமளித்துக் கவனித்து வருவதாகவும் முதல்வர் கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

மீண்டும் தமிழ் நாட்டில் தமிழ்க் குழுக்களின் முகாம்கள் அமைக்கவோ ஆயுதப்பயிற்சியளிக்கவோ இடமளிக்கப்படமாட்டாதென்றும் முதல்வர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் குழுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும்தான் தமது இந்த முடிவுக்குக் காரணம் என்றும் முதல்வர் விளக்கம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் ஈழப் போராளிக் குழுக்களுக்கிடையே மோதல் ஏற்படுவது மட்டுமல்ல. சூளை மேட்டில் நடந்த சம்பவம்; மற்றும் சில இடங்களில் நடைபெற்ற கொள்ளைகள் போன்றவைகளும் தமிழ் நாடு அரசுக்குத் தேவையற்ற தலையிடி.

ஈழத்துக்கு இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழ் நாட்டிலுள்ள அகதிகளை ஈழத்துக்குத் திருப்பி அனுப்புவதாக அறிவித்துக் கப்பல்களில் பலர் கொண்டு வரப்பட்டனர்.

வீதிகள் பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டு இந்த ''அகதிகள்'' அந்தரங்கமாகப் பாதுகாப்பாக யாழ். இந்துக்கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

தமிழ் நாட்டிலுள்ள ஈழ அகதிகள் யாவரும் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டதாக இந்திய வானொலி அச்சமயம் அறிவித்தது.

உண்மையில் இங்கு கொண்டு வந்து இறக்கப் பட்டவர்கள் அனைவரும் ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ. என். டி. எல். எவ், புளட் ஆகிய குழுக்களைச்

# பாலஸ்தீனப் பிரச்சினையும் வேறுபட்ட நிலைப்பாடுகளும்

பாலஸ்தீனப் பிரச்சினை கடந்த 70 வருடங்களுக்கு மேலாக சர்வதேச அரங்கில் சிக்கலானதும், தீர்க்கப்படாததுமான விடயமாக இருந்து வருகின்றது. இதனால், அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நீண்டகாலமாகப் பிணக்குகள் இருந்து வருவதுடன் முழு அளவு யுத்தங்களும் இடம் பெற்றுள்ளன. இப்பிரச்சினை முதலாம் காமயுத்தத்தில் பிரித்தானியப் படைகள் துருக்கியைத் தோற்கடித்து, பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியதிலிருந்து ஆரம்பித்ததெனலாம். 1917 இல் பிரித்தானியாவின் வெளிநாட்டு அமைச்சர் பல்பர் பிரபு பிரித்தானியாவிலுள்ள யூத சமூகத் தலைவருள் ஒருவரான எருத்சைல்ட் பிரபுவிற்குப் பாலஸ்தீனத்தில் யூதருக்கு ஒரு தாயகம் அமைப்பதற்கு உதவுவதாக வாக்குறுதி தெரிவித்து எழுதிய கடிதம் வெளியிடப்பட்டதிலிருந்து, பிரித்தானியாவின் நிலை பாலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகக் கோரிக்கைக்குச் சாதகமாக அமைந்தது, 1881, 82 லிருந்தே ரஷ்யாவிலிருந்து வந்த யூதர்களால் பாலஸ்தீனத்தில் முன்னோடிக் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன. 1897இல் தியோடர் ஹேசலின் யூத அரசுக் கோரிக்கையின் விளைவால் பாலஸ்தீனத்தில் யூதக் குடியிருப்புக்கள் துரிதமாக அதிகரிக்கத் தொடங்கின. 1937 இல் பிரித்தானியாவில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையின் பிரகாரம் பாலஸ்தீனத்தை அரபு, யூத நாடுகளாகப் பிரிக்கவும் ஜெருசலம், நஸ்ரத் ஆகிய நகர்களைப் பாதுகாப்புப் பகுதிகளாகப் பிரகடனப் படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது. எனினும், பாலஸ்தீன அராபியர்கள் இரு நாட்டுத் திட்டத்தை எதிர்த்து, சிறுபான்மையர் உரிமை கொண்ட ஒரு நாட்டுத் திட்டத்தை வலியுறுத்தியமையால் பிரிவினைத் திட்டம் கைவிடப்பட்டது. இதனையடுத்து 1939 இல் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை தனியொரு அரசை ஏற்றும் மேலும் 75,000 யூதர்கள் மாத்திரம் குடியேற அனுமதிப்பதாயும் கூறப்பட்டது. இதனையும் இரு சாராரும் ஏற்கவில்லை. யூதர்களின் குடியுள் வருகை, குடியேற்றம், நிலக்கொள்வனவு, நில அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகரிக்க,

முடிவு கிட்டாததால் 1949இல் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டனர். இந்த யுத்தத்தால் இஸ்ரேலுக்கு ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பிலும் பார்க்க 2000 ச. மைல் பரப்பை அது கூடுதலாகப் பெற்றது. மேலும் மேற்குக் கரையையும் ஜெருசலத்திற்கான இடைவெளியையும்

கைப்பற்றி தொடர்ச்சியான ஒரு நிலப்பரப்பைக் கொண்ட நாடாக மாற்றியது. 1950இல் ஜோடான், பழைய ஜெருசலம் உட்பட மேற்குக் கரையைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. காஸாப்பகுதி எகிப்தின் நிர்வாகத்தின் கீழ் அமைந்தது. இந்நிலையில், பாலஸ்தீன அராபியர்களின் அரசியல் நிலை மேலும் சிக்கலானதுடன், இஸ்ரேலிடம் கண்ட தோல்வி அராபிய உலகிற்கு, குறிப்பாகஎகிப்திற்கும் பெரும்சவாலாக அமைந்தது. பாலஸ்தீனப் பிரச்சினையின் விளைவாக, மத்திய கிழக்கில் முடியாட்சி நாடுகள் சிலவற்றில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் எகிப்து, சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் இராணுவமயமாக்கமும், யுத்த முஸ்திப்புகளும் இடம் பெறலாயின. இஸ்ரேல் உருவாக்கத்தால் அத்திலாந்திக்கிலிருந்து அராபிக் கடல்வரை பரந்துள்ள அராபியப் பிரதேசத்தைப் பௌதீக ரீதியாகப் பிரித்தது மாத்திரமன்றி, அரபு நாடுகளுக்கிடையே கருத்து வேற்றுமைகளையும் உருவாக்கியதெனலாம்.

### இஸ்ரேல் - அரேபிய யுத்தங்கள்

பாலஸ்தீனப் பிரச்சினை காரணமாக எழுந்தஅராபியா இஸ்ரேல் பிணக்குகளால் 1949க்குப் பின்னர், 1956, 1967, 1973ஆம் ஆண்டுகளில் இரு பிரிவினருக்குமிடையில் பெரும் யுத்தங்கள் இடம் பெற்றன.

இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையில் நேரடியாக மூன்றும். இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையில் இரண்டும், இஸ்ரேல் ஜோர்டானுக்கும் இடையில் ஒரு யுத்தமும்

துடன் இணைந்து ஐக்கியப்பட்ட நகராக்கி, ஒரே நகராட்சியின் கீழ் கொண்டு வந்துள்ளது. இவ் யுத்தத்தில் இஸ்ரேல் 68588 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும், 1-2 மில்லியன் மக்களையும் தனது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் எகிப்துக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் சுயஸ் கால்வாய் ஓரமாக உராய்தல் சண்டை (Athition-war) நடந்ததால் கால்வாய் நகரங்கள் பெரும் அழிவுக்கு உட்பட்டன. இஸ்ரேல் 1967 இல் கைப்பற்றிய நிலப்பரப்பை மீளக் கொடுக்கத் தயக்கம் காட்டியும், இவ்விடயம் பற்றிக் கதைப்பதற்கு விருப்பம் காட்டாமலும் இருந்ததாலேயே 1973 ஆம் ஆண்டு யுத்தத்தை அராபியர் ஆரம்பித்தனர். 1973 ஆம் ஆண்டு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தினால் சுயஸ் கால்வாய்ப் பகுதிகளின் இரு பக்கத்திலும் இருவரும் நிலைகொண்டனர். இதனால் சர்வதேச ரீதியில் பெரும் சிக்கல் உருவானதுடன் எகிப்துக்குச் சார்பாக, சோவியத் யூனியன் நேரடியாகத்தலையிடும் நிலை உருவாகியது. எனினும், சோவியத் யூனியனும், அமெரிக்காவும் ஏற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப்படி இரு நாடுகளும் கால்வாய்ப் பகுதியிலிருந்து படைவிலகல் செய்து கொண்டன. மேலும் 1975 இல் அமெரிக்காவின் ராஜதந்திர முயற்சியால் இஸ்ரேலின் இரண்டாம் கட்டப் படைவிலகல்சினாயில் இடம்பெற்றது. இதன் மூலம் இஸ்ரேல் சினாயில் கேந்திரக் கணவாய்களான மிலிற்றா கிடியை எகிப்திடம் கொடுத்தது. இதற்கு மாற்றாக, எகிப்து இஸ்ரேல் கப்பல்களை சுவெஸ் கால்வாய் வழியாகப் போக்குவரத்து செய்ய அனுமதித்தது. 1977ல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்த உறவில் ஒரு புதிய திருப்பம் ஏற்படலாயிற்று. எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் முன்னைய ஜனாதி

தம் தனது படையை விலக்கியது. சிரியா லெபனானில் தலையீடு செய்திருப்பதும் பெக்காப் பள்ளத்தாக்கில் 30,000க்கு மேற்பட்ட படைகளை வைத்திருப்பதும் இஸ்ரேலுக்குபெரும்பிரச்சினையாகவுள்ளது இஸ்ரேலுக்கும் சிரியாருக்குமிடையில் பகைமை நிலை தொடர்ந்தும் காணப்படுவதுடன், பாலஸ்தீனப் பிரச்சினையிலும் சிரியா கடின போக்கைக் கொண்டுள்ளது. இஸ்ரேலுடன் அது சமாதானப் பேரத்தில் ஈடுபட்டு.

கோலான் குன்றுகளை முழுமையாக மீளம்பெற முயற்சிக்கவில்லை.

1967 இல் இஸ்ரேவேலிடம் இழந்த கிழக்கு ஜெருசலம். மேற்குக் கரைப்பகுதிகளை மீளப்பெற ஜோர்டான் நீண்ட காலமாக முயற்சித்த

பொழுதும் 1988 ஆம் ஆண்டு இவ்விரு பகுதிகளையும் பாலஸ்தீனப் பகுதியென ஏற்றுக் கொண்டு, அதன் மீது கொண்டிருந்த ஆதிபத்திய உரிமையை விட்டுக் கொடுத்துப் பாலஸ்தீனப் பிரச்சினையுடன் தான நேரடியாகக் கொண்டு இருந்த தொடர்பையும் தவிர்த்துள்ளது.

லெபனானுக்கு இஸ்ரேலுக்கும் இடையில் 1970க்கு முன்னர் முக்கியமான இருபக்கப் பிரக்னை எதுவும் இருக்கவில்லை. 1971 இல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஜோர்டானிலிருந்து வெளியேற்றப்பட்டபோது அவ்வியக்கம் தமது தலைமையகத்தை பெய்ரூட்டிற்கு இடமாற்றி, இஸ்ரோலுக்கு எதிரான தமது நடவடிக்கைகளைத் தென் லெபனானை மையமாகக் கொண்டு மேற்கொண்டது. இதனால் தென் லெபனான் பி. எல். ஓ. நிலையங்கள் இஸ்லேின் விமானத் தாக்குதலுக்கு அடிக்கடி உட்பட்டன.

(தொடரும்)

# பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

தமிழினத்தின் அருநிதியமான பலாலி ஆசிரியர் கல்லூரியின் அவல நிலைபற்றி அவ்வப்போது பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. ஆனால் நடவடிக்கை ஏதும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

கணித, விஞ்ஞான, விவசாய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஒரே கல்லூரியான பலாலி ஆசிரியர் கல்லூரி இராணுவ நடவடிக்கையால் சகல வளங்களும் படைத்த தன் வளாகத்தை விட்டு 1986இல் இடம் பெயர்ந்தது. இந்தக் கல்லூரிக்கு ஏற்றதோர் இடம் ஏற்பாடு செய்வதற்கு கடந்த நான்காண்டுகளாக எடுக்கப்பட்ட முயற்சி தூரதிருஷ்டியற்ற சிலர் போட்ட முட்டுக்கட்டைகளால்கைகூடாது போயிற்று.

வேண்டுமாயின் ஆய்வுகூடவசதிகள், வாசிகசாலை, விளையாட்டு மைதானம், இருப்பிட வசதி போன்ற அனைத்தும் தகுந்த வகையில் அமைதல் வேண்டும். அதற்கேற்ப அமைக்கப்பட்ட பலாலி ஆசிரியர் கலாசாலை வளாகத்தைப் பிறிதோர் இடத்தினில் தெரிவு செயயலாம் என்பது வெறும் பகற் கனவாகும். அதனாலேயே தகுந்த ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில், அகதி அந்தஸ்துடன் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது.

படிப்படியாக வெளியேறிச் கொண்டிருக்கும் இந்திய அமைதிப்படையினர் பலாலியை விட்டு எந்நேரமும் வெளி

## மக்கள் மடல்

ஓர் ஆசிரியர் கல்லூரி ஒரு மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதிக்குள் முடங்கிக் கிடக்கும் அவலத்தை நேரில் பார்த்தாலன்றி நம்புவது கஷ்டமாயிருக்கும். விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் இல்லை. விவசாயச் செய்முறைப் பயிற்சிக்கும் ஒரு துண்டு காணி கூட இல்லை. செய்முறை அனுப

யேறக்கூடிய இன்றைய நிலையில், பலாலி ஆசிரியர் கல்லூரி தனது வளாகத்துள் மீளக் குடிபுகுதல் மிகவும் அவசியமானதாகும். ஆனால் தமிழ்ச் சமூகமும் தனக்கேயுரிய அசமந்தப்போக்கால் வாளா இருக்கிறது அமைதிப்படை வெளியேறிய கையோடு தீய சக்திகள் வளாகத்துள் புகுந்து

தமிழ்நாட்டில் ஈழப் போராளிக் குழுக்களுக்கிடையே மோதல் ஏற்படுவது மட்டுமல்ல. சூளை மேட்டில் நடந்த சம்பவம்; மற்றும் சில இடங்களில் நடைபெற்ற கொள்ளைகள் போன்றவைகளும் தமிழ் நாடு அரசுக்குத் தேவையற்ற தலையிடி.

ஈழத்துக்கு இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழ் நாட்டிலுள்ள அகதிகளை ஈழத்துக்குத் திருப்பி அனுப்புவதாக அறிவித்துக் கப்பல்களில் பலர் கொண்டு வரப்பட்டனர்.

வீதிகள் பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டு இந்த ''அகதிகள்'' அந்தரங்கமாகப் பாதுகாப்பாக யாழ். இந்துக்கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

தமிழ் நாட்டிலுள்ள ஈழ அகதிகள் யாவரும் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டதாக இந்திய வானொலி அச்சமயம் அறிவித்தது.

உண்மையில் இங்கு கொண்டு வந்து இறக்கப் பட்டவர்கள் அனைவரும் ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ. என். டி. எல். எவ், புளட் ஆகிய குழுக்களைச் சேர்ந்தவர்களே.

இவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கி பாதுகாப்பும் கொடுத்து விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்குப் பயிற்சியுமளிக்கப்பட்டது.

இந்த முயற்சியும் ஆட்சிபீடத்தில் தமது கைப் பாவையை வைத்து ஆட்டுவிக்கலாமென டில்லி தர்பாரினதும் உறவுப் பிரிவு 'றோ' வின் கனவும் இப்போது பொய்யாகிப் பழங்கதையாகப் போய்விட்டது.

இந்நிலையில் தாங்களே சுமந்த பொறுப்பைத் தாமே கொண்டுபோய் இறக்கவேண்டிய கடமை 'றோ' வுக்கும் இந்திய இராணுவத்துக்குமிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டன.

இதனால்தான் இந்தக் குழுவினரையும் குடும்பத்தினரையும் கப்பல்களில் ஏற்றத் தமிழ் நாட்டில் இறக்கிவிடலாம் என்று கருதின.

'சூடு கண்ட பூனை' முதல்வர் கருணாநிதி விழித்துக்கொண்டார். சரியானமுடிவை மேற்கொண்டார்.

மண்டபம் பகுதியில் சமீபத்தில் நடந்த சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து ''தமிழ் நாட்டிலிருந்து ஈழப் போராளிக் குழுக்களை திருப்பி அனுப்ப வேண்டும்'' என்று குரல் கொடுத்த முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் ''ஈழத்து அகதிகளை இறங்கவிடாமல் கப்பல்களை கருணாநிதி திருப்பி அனுப்பியது தவறு'' என்று கண்டித்திருக்கிறார்.

இந்தக் குழுக்கள் தமிழ் நாட்டில் இறங்கினால் இவர்களை காங்கிரசும் ஜெயலலிதாவின் அண்ணா தி. மு. க. வும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கருணாநிதியின் ஆட்சியைக் கவிழ்க்க முனைவார்களென்பதும் கருணாநிதிக்குப் புரியாததா?

''அக்கரையிலிருந்து கொண்டு மீண்டும் ஈழத் தமிழர்களுக்காகப் போராடுவோம்'' என்று வரதராஜப் பெருமாள் கூறியிருப்பதும், இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறினாலும் அரசியல் அரங்கை விட்டு வரதராஜப்பெருமாள் விலகமாட்டாரென்றும் தாங்கள் பெருமாளைக் கைவிடாமல் அவரைக் கைகொடுத்துக் காப்பாற்றப் போவதாகவும் ''றோ என்ற இந்திய உளவுப் பிரிவு தெரிவித்திருப்பதும் சிந்திக்க வேண்டியவை''

கலைஞர் கருணாநிதி தற்காலிகமாகத் தப்பிக் கொண்டார்!

பிரிக்கவும் ஜெருசலம், நஸ்ரத் ஆகிய நகர்களைப் பாது காப்புப் பகுதிகளாகப் பிரகடனப் படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது. எனினும், பாலஸ்தீன அராபியர்கள் இரு நாட்டுத் திட்டத்தை எதிர்த்து, சிறுபான்மையர் உரிமை கொண்ட ஒரு நாட்டுத் திட்டத்தை வலியுறுத்தியமையால் பிரிவினைத் திட்டம் கைவிடப்பட்டது. இதனையடுத்து 1939 இல் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை தனியொரு அரசை ஏற்றும் மேலும் 75,000 யூதர்கள் மாத்திரம் குடியேற அனுமதிப்பதாயும் கூறப்பட்டது. இதனையும் இரு சாராரும் ஏற்கவில்லை. யூதர்களின் குடியுள்வருகை, குடியேற்றம், நிலக் கொள்வனவு, நில அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகரிக்க,

பிரித்தது மாத்திரமன்றி, அரபு நாடுகளுக்கிடையே கருத்து வேற்றுமைகளையும் உருவாக்கியதெனலாம்.

**இஸ்ரேல் - அரேபிய யுத்தங்கள்**

பாலஸ்தீனப் பிரச்சினை காரணமாக எழுந்தஅராபியா இஸ்ரேல் பிணக்குகளால் 1949க்குப் பின்னர், 1956, 1967, 1973ஆம் ஆண்டுகளில் இரு பிரிவினருக்குமிடையில் பெரும் யுத்தங்கள் இடம் பெற்றன.

இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையில் நேரடியாக மூன்றும். இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையில் இரண்டும், இஸ்ரேல் ஜோர்டானுக்கும் இடையில் ஒரு யுத்தமும்

வும் ஏற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானப்படி இரு நாடுகளும் கால்வாய்ப் பகுதியிலிருந்து படை விலகல் செய்து கொண்டன. மேலும் 1975 இல் அமெரிக்காவின் ராஜதந்திர முயற்சியால் இஸ்ரேலின் இரண்டாம் கட்டப் படைவிலகல்சினாயில் இடம்பெற்றது. இதன் மூலம் இஸ்ரேல் சினாயில் கேந்திரக் கணவாய்களான மிலிற்றா கிடியை எகிப்திடம் கொடுத்தது. இதற்கு மாற்றாக, எகிப்து இஸ்ரேல் கப்பல்களை சுவெஸ் கால்வாய் வழியாகப் போக்குவரத்து செய்ய அனுமதித்தது. 1977ல் எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்த உறவில் ஒரு புதிய திருப்பம் ஏற்படலாயிற்று. எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் முன்னைய ஜனாதி

## பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Phd. Durham

யூதர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையே முரண்பாடுகள் வளரலாயின 2ஆம் உலகமகாயுத்த ஆரம்பத்தில் பாலஸ்தீனத்தில்யூதர்களின் எண்ணிக்கை 5 லட்சமாக அதிகரித்தது. இது மொத்த குடித்தொகையில் 30% ஆகும். 1946 இல் யூதர்களின் எண்ணிக்கை 6,78,000 ஆகவும் பாலஸ்தீன அராபியர்களின் எண்ணிக்கை 12,69,000 ஆகவும் இருந்தன.

பாலஸ்தீனத்தில் அராபிய யூதப் பிரச்சனைகளைத்தீர்க்க முடியாமல் அவை மேலும் மேலும் சிக்கலடைய பிரித்தானியா இப் பிரச்சனையை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளித்தது. இச்சபை 1947 நவம்பர் 27ஆம் திகதி பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து அராபியர்களுக்கும், யூதர்களுக்கும் தனித்தனியான சுதந்திர அரசுகளை உருவாக்குவதுடன் ஜெரூசலேம், பெத்தலேகம் நகர்களுக்கு சர்வதேச அந்தஸ்துக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பாலஸ்தீனத்தைத்தனியொருஅரபு யூதப் பரப்புக்களாகப் பிரிப்பதில் ஏற்பட்ட பிரச்சனையில், தொடர்ச்சியற்றநிலப்பரப்புக்களைக் கொண்ட நாடுகளாக அமையும் முறையில் ஐக்கிய நாடுகள் சபையின் ''பிரிவினைத் திட்டம்'' அமைந்திருந்தது. இத்தீர்மானத்தைத் தொடர்ந்து பிரித்தானியா தனது ஆட்சிக்காலம் முடிவடைந்ததும் வெளியேற, யூதர்கள் இஸ்ரேலைப் பிரகடனப் படுத்தினார்கள். பாலஸ்தீனப் பிரிவினையை அராபியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஜோர்டான், எகிப்து, சிரியா, ஈராக், ஆகிய அரபு நாடுகள் இஸ்ரேல் மீது படை எடுத்தபோதும், எதிர்பார்த்த

இடம்பெற்றுள்ளன. 1956இல் எகிப்து' சுயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கினதாலும், இஸ்ரேல் நாட்டின் கப்பல்கள் கால்வாய் வழியாகப் போக்குவரத்துச் செய்வதைத் தடை செய்ததாலும் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இஸ்ரேலும் சேர்ந்து எகிப்து மீது படை எடுத்தது. இவ்யுத்தத்தில் இஸ்ரேல் சினாய்ப் பகுதியைக் கைப்பற்றியது என்றும், அமெரிக்காவின் கட்டாயத்தின் பேரில் 3 நாடுகளும் எகிப்து மீது கொண்ட நடவடிக்கைகளைக் கைவிட்டதுடன், இஸ்ரேல் கைப்பற்றிய சினாய்ப் பகுதியிலிருந்தும் பின்வாங்கியது. சிரியாவின் எல்லை கடந்த அடிக்கடித் தாக்குதல்களால் சீற்றமடைந்திருந்த இஸ்ரேல், சிரியா மீது படையெடுக்கத் திட்டமிடுவதாகக் கூறப்பட எகிப்து சிரியாவின் உதவிக்குப் போனது. எகிப்து ரைரான் சலசந்தியை இஸ்ரேல் கப்பல் போக்குவரத்துக்கு மூடி, சாமேல் சேக்கில் தனது படையை நிறுத்தி, சினாயிலிருந்து ஐக்கியநாடுகள் சபை சமாதானப் படையை விலக்கி, சினாய்க்குள் தனது படையை அனுப்பியது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து 1967 இல் அரபு இஸ்ரேல் யுத்தம் நிகழ்ந்தது.

1966 ஆம் ஆண்டு யுத்தத்தின் விளைவாக இஸ்ரேல் எகிப்திடமிருந்து காஸா' சினாய்ப் பகுதிகளையும் சிரியாவிலிருந்து கோலன் குன்றையும், ஜோர்டானிடமிருந்து கிழக்கு ஜெருசலத்தையும், மேற்குக் கரையையும் கைப்பற்றியது. இந்த யுத்தத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய பரப்புகளும், கிழக்கு ஜெருசலத்தை மேற்கு ஜெருசலத்

அப்துல் நசார் கடைப்பிடித்த மத்திய கிழக்குக் கொள்கை வெற்றியழிக்காமல் நாட்டிற்குப் பெரும் அழிவைக் கொடுத்தால் இஸ்ரேலுடன் சமாதானம் மூலம் இப்பகுதிப்பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முன்வந்தார். இவரது சமாதான அடியெடுப்பை இஸ்ரேல் ஏற்றது. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் பல ஏற்ற இறக்கங்களைக் கடந்து 1979ல் அமெரிக்க இராஜீக உறவு மூலம் எகிப்திற்கும் இஸ்ரேலுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக எகிப்து, இஸ்ரேலை அங்கீகரித்தது. இழந்த மண்ணை மீட்டெடுத்தது. 1982 லிருந்து இஸ்ரேல் சினாயிலிருந்து தனது படைகளை முற்றாக விலக்கிக் கொண்டது. இரு நாடுகளுக்குமிடையே தாபா நிலத்துண்டு தொடர்பாக ஏற்பட்ட எல்லைப் பிரச்சினை சர்வதேச நீதிமன்றத் தீர்ப்புச்கு விடப்பட்டு அத் தீர்ப்பின் பிரகாரம் இத்துண்டு எகிப்துக்கு மீளக் கொடுக்கப்பட்டது. மேலும் ஜனாதிபதி சதாத்தின் கொலையும், பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்பட்டுள்ள தா[illegible]மும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை.

1973 ஆம் ஆண்டு இஸ்ரேல் சிரியா யுத்தத்தின் பின்னர், அமெரிக்க இராஜதந்திர முயற்சியால் இருநாடுகளுக்குமிடையில் படை இணை பிரிப்பு ஏற்பட்டது. இதன் பின் இஸ்ரேல் 1973 இல் கைப்பற்றிய பகுதிகளையும், 1967 இல் கைப்பற்றிய பகுதிகளுள் குனிற்றீரா நகர் உட்பட்ட சில பகுதிகளிலிருந்

1986இல் இடம் பெயர்ந்தது. இந்தக் கல்லூரிக்கு ஏற்றதோர் இடம் ஏற்பாடு செய்வதற்கு கடந்த நான்காண்டுகளாக எடுக்கப்பட்ட முயற்சி தூரதிருஷ்டியற்ற சிலர் போட்ட முட்டுக்கட்டைகளால்கைகூடாது போயிற்று.

அந்தஸ்துடன் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது.

படிப்படியாக வெளியேறிச் கொண்டிருக்கும் இந்திய அமைதிப்படையினர் பலாலியை விட்டு எந்நேரமும் வெளி

# மக்கள் மடல்

ஓர் ஆசிரியர் கல்லூரி ஒரு மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதிக்குள் முடங்கிக் கிடக்கும் அவலத்தை நேரில் பார்த்தாலன்றி நம்புவது கஷ்டமாயிருக்கும். விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இல்லை. விவசாயச் செய்முறைப் பயிற்சிக்கும் ஒரு துண்டு காணி கூட இல்லை. செய்முறை அனுபவம் பெறாத விஞ்ஞான ஆசிரியர்களால் மாணவருக்கு என்ன பயன் விளையக்கூடும்? நூலகம் ஓர் அறையில் இயங்குகிறது. பெரும்பான்மை பெண்கள் உள்ளடக்கிய முன்நூறுக்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கு மலசலகூட வசதிகள் அறவேயில்லை.

ஆசிரிய பயிற்சி என்பது வெறும் வகுப்பறைக் கற்றலாக இருக்க முடியாது முழுமையான பயிற்சி நடைபெற

யேறக்கூடிய இன்றைய நிலையில், பலாலி ஆசிரியர் கல்லூரி தனது வளாகத்துள் மீளக் குடிபுகுதல் மிகவும் அவசியமானதாகும். ஆனால் தமிழ்ச் சமூகமும் தனக்கேயுரிய அசமந்தப்போக்கால் வாளா இருக்கிறது அமைதிப்படை வெளியேறிய கையோடு தீய சக்திகள் வளாகத்துள் புகுந்து எஞ்சிக் கிடக்கும் பொருட்களை சூறையாடும் அபாயமும் இருக்கிறது.

இது நல்ல தருணம்! தூரதிருஷ்டியோடு செயற்பட வேண்டிய தருணம்! நாம் இன்று எடுக்கும் நடவடிக்கையில் நம் இனத்தின் கல்வி வளர்ச்சியும், ஏன் எதிர் காலமும் தங்கியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் ஒரு மாணவன்
மயில்வாகனம்

# தபாற் பெட்டிகளுக்கு இன்னமும் தட்டுப்பாடா?

ஆசிரியர்
ஈழநாதம்

பொதுமக்கள் தங்களது உறவினர்களோடு பல்வேறு விதங்களிலே தொடர்பு கொண்டு | தங்களது அத்தியாவசிய செய்திகளைப் பரிமாறி வருகின்றனர். மக்களது செய்திகளைப் பரிமாறுகின்ற சாதனங்களுள் தபால் சேவை மிகவும் முக்கியமானதாகும். இதன்மூலம் குறைந்தசெலவும் கூடியபயனையும் மக்கள் பெறுகின்றனர்.

மக்கள் தங்களது கடிதங்களை போடுவதற்காக தபாற் பெட்டிகள் இருக்குமிடங்களை நோக்கி அலைந்து திரிகின்றனர். சில பொது இடங்களில் அமைந்துள்ள தபாற் பெட்டிகள் எதுவிதமானபாதுகாப்பற்ற நிலையில் அநாதரவாகக் கிடக்கின்றன.

அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பல தபால் பெட்டிகள் இன்னமும் திருத்தப்படவில்லை. ஏற்கனவே ஆங்காங்கே அமைக்கப்பட்டதபால் பெட்டிகள் பற்றாக் குறையாகவுள்ளன. மக்கள்பலர் தாங்கள் இருக்குமிடங்களைவிட தூரஇடங்களுக்கு தபாலினை போடுவதற்காக பல்வேறுசிரமங்களின்மத்தியில் செல்ல வேண்டியநிலையிலுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள்மக்கள்வாழ்கின்ற பிரதானபகுதிகளில் கூடியளவு தபால் பெட்டிகளை நிறுவி மக்களது பெரும் குறைகளை நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

இ. சுப்பிரமணியம்
சுன்னாகம்,

## சாவகச்சேரியில் மட்டும் அவசரம் ஏன்?

யாழ். மாவட்டத்தின் அனைத்து முக்கியமான நகரங்களும் இரவு எட்டு மணி வரைக்கும் சுறுசுறுப்பாக இயங்கிவரும் வேளையில் சாவகச்சேரியில் மட்டும் ஆறு மணியுடன் ஒருசில சாப்பாட்டு கடைகளைத்தவிர ஏனையவை பூட்டியிருப்பது கவனிக்கக் கூடியதாக உள்ளது.

இதனால் மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சி பகுதிக்கு செல்லும் பயணிகள் இதுகுறித்து தமது மனவருத்தத்தை தெரிவிக்கின்றனர். சாவகச்சேரி வர்த்தகர்கள் சங்கம் கடைகளை எட்டு மணிவரைக்குமாவது திறந்திருப்பதற்கு வகைசெய்ய மாட்டாதா?

லோகேஸ்வரன்

ஈழநாதம்

# பெருமாள் எங்கே?

## அரசியல் வட்டாரங்கள் கேள்வி!

# "வித்தியாசமானகலைக் கல்லூரியாக இருக்கும்"

## - மகேந்திரராசா

(கிளிநொச்சி)

தமிழ் ஈழத்தில் அமைந்துள்ள ஏனைய கலைக்கல்லூரிகளை விட இது வித்தியாசமானது.

இக்கல்லூரி எமது இனத்தின் கலை, கலாசாரத்தை பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கவின்கலைக் கல்லூரியை திறந்து வைத்துப் பேசிய விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) கூறினார்.

திரு. வீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசிய திரு. மாத்தயா, அச்சுறுத்தல்களில் இருந்து எமது கலை கலாசாரத்தை பாதுகாக்க வேண்டியது இக்கல்லூரியின் பொறுப்பாகும்.

சமூக சீர்கேடுகளான பெண் அடிமை சீதனக்கொடுமைகளை களைந்து எறியக்கூடியதாக இக்கலைக்கல்லூரியின் செயற்பாடு இருக்கவேண்டும்.

அந்நிய நாகரீகத்தால் தென்னிந்தியத் திரைப்படஙகளினால் சீர்கெட்டிருக்கும் எமது சமுதாயத்தை புதிய முறையில் உலகமே வியக்கத்தக்கதாக சீர் செய்யவேண்டும்.

இந்த மண்ணில் இருக்கிற பேதங்களை உடைத்தெறிய கலைஞர்கள் முன்வரவேண்டும். இந்து, முஸ்லிம், மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான், தாழ்த்தப்பட்டவன், உயர்ந்தவன் என்ற வேறுபாடுகள் விடுதலைப் புலிகளிடம் இல்லை.

அமெரிக்காவில் 11.5 வீதமான பெண்கள் படையில் இருக்கலாம் என்று சட்டம் உண்டு ஆனால் அவர்கள் ஆயுதம் தூக்கிப் போராடச் சட்டம் இல்லை. தமிழ் ஈழத்தில் எத்தனை பெண் போராளிகள் உள்ளனர். எத்தகைய போராட்டங்களைமுன்னின்று நடாத்தினர். என்பதை மக்கள் அறிவார்கள் என்றார்.

திரு. யோகரட்ணம் யோகி பேசுகையில்: கிளிநொச்சி வர்த்தகர் சங்கம், சர்வோதயம், தென்னிந்திய திருச்சபை மற்றும் பலரது உதவிகளுடன் இது அமைக்கப்பட்டது. மக்களின் உதவியுடன் தொடர்ந்து இது வளரவேண்டும்.

மினி சினிமாக்களை மூடச் சொன்னோம் இதற்குப் பலர் எதிர்ப்பு தெரிவித்தனர், தென்னிந்தியாவிலிருந்து வரும் படங்களால் எமது மாணவரின் கல்வி பாதிக்கப்படுகிறது. எமது கலாசாரம் வளரவேண்டும். அதற்காகவே இங்கு கலாசாரப்பேரவை ஒன்றை ஆரம்பித்தோம்.

எமது மொழியில் மக்களுக்கு புரியத்தக்க முறையில் கலை நிகழ்ச்சிகளை உருவாக்கவேண்டும். அதனால் தென்னிந்திய படங்களுக்கு மவுசு இல்லாமல் போய்விடும்.

எமது பலவிதமான போராட்டத்தின் மூலம் இந்திய இராணுவத்தை வெளியேற்றியிருக்கிறோம். குடியேற்றத்தை நிறுத்தச் சொல்லியும், இராணுவ முகாம்களை மூடும்படியும், ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்குமாறும் இலங்கை அரசுடன் பேச்சுநடாத்திக்கொண்டிருக்கிறோம்.

இந்திய அரசுக்கு எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அது எமது போராட்டத்தைக் கொச்சப்படுத்தி தனது அதிகாரத்தை இங்கு செலுத்தலாம் என எண்ணியது அதற்காக இங்கு ஒரு கூலிப்படையும் கிடைத்தது.

ஒரு சிறிய படையைக் கொண்ட விடுதலைப் புலிகளால் பெரிய ராணுவ பலம் கொண்ட இந்தியாவை எதிர்க்க முடிந்தது என்று உலகமே வியந்துகொண்டிருக்கிறது. அத்தகைய வீரம் பொருந்திய போராட்டம் தான் எமது போராட்டம் என்றார்.

கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, வன்னி மாவட்ட பொறுப்பாளர் ...

---

# வவுனியா ரயில்வே கழிவறை துர்நாற்றம் மக்கள் அவதி

(வவுனியா)

வவுனியா ரயில்வே நிலையத்தில் அமைந்துள்ள பொது மக்கள் கழிவறை மனிதக் கழிவுகள் நிரம்பி வழிகின்றன பல மாதங்களாக வவுனியா ரயில்வே நிலையத்தில் அமைந்துள்ள கழிவறை இவ்வாறேயுள்ளது இதனால் கொழும்புக்கு செல்லும் பயணிகள் வவுனியா ரயில்வே ...

இக்கழி வறைகளிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. ரயில்வேயில் அமைக்கப்பட்டிருக்கும் 'கன்டீன்' இக்கழிவு அறையிலிருந்து பத்து யார் தூரத்தில் இருக்கின்றது. இந்த நாற்றம் சகிக்காது பிரயாணிகள் கஷ்டம் அடைகின்றனர்.

இது இவ்விதம் இருக்க ...

---

## புத்தர் சிலையுடன் 10 பேர் மூழ்கினர்

(நியூடெல்லி)

புத்தர் சிலையை ஏற்றிச் சென்ற படகொன்று எதிர்பாராமல் மூழ்கியதால் படகில் சென்ற பத்துப்பேர் உயிரிழந்தனர் இச் சம்பவம் தென் இந்தியாவில் ஹுசெயின் சா நகரத்தில் சென்ற சனியன்று நடந்ததாகத் தெரிய வருகிறது.

350 தொன் எடையுள்ள இக் கருங்கல் சிலையைச் செதுக்க ரூபா 12 கோடி செலவாகியதாம் சிலை வந்தடைய வேண்டிய ஹுசெயின்சா நகரத்தை (ஏரி) சேர்ந்ததும் திடீரென்று சிலை தட்டிலிருந்து தவறித் தண்ணீரில் மூழ்கிய சமயம் படகு குடை சாய்ந்ததாம்.

---

## அடையாளம்தெரியாத இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்திய சாலை எதிரே மயங்கிய நிலையில் கிடந்த ஒருவர் சிகிச்சை பெற்று வந்த வேளையில் மரணமானார்.

கடந்த ஒன்பதாம் திகதி இரவுவைத்திய சாலை எதிரே மயங்கிய நிலையில் மேற்படி நபர் கிடந்த போது, இவரை வைத்திய சாலை ஊழியர்கள் சிலர் சிகிச்சைக்கு அனுமதித்தனராம். நேற்று இவர் மரணமானார் என்று தெரிவிக்கப் பட்டது.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவருக்கு வயது 30 இருக்கலாம் என்றும் பச்சை நிறச் சறமும் நீல நிறச் சேர்ட்டும் அணிந்திருக்கிறார் என்றும் யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

(தி)

---

## பொதுக் கூட்டம்

(சுன்னாகம்)

இன்று மாலை ஆறுமணிக்கு சுன்னாகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணியின் பொதுக்கூட்டமும் கலை கலாச்சாரப் பிரிவினர் வழங்கும் "நடந்துவந்த பாதை" என்ற வில்லிசையும், "விடியலைத் தேடுவோம்" என்ற நாடகமும் நடைபெறும்.

---

## புகையிரத பயணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

---

# மாகாணசபை செயலிழந்தது

(கொழும்பு)

**வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் எங்கே? இந்தக் கேள்வி திருகோணமலையில் மட்டுமல்ல கொழும்பில் அரசாங்க வட்டாரங்களிலும், அரசியல் வட்டாரங்களிலும் நேற்றுப் பெரிதாக அடிபட்டது.**

திரு. வரதராஜப் பெருமாளின் மனைவி கடந்த வியாழக்கிழமை திருகோணமலையிலிருந்து இந்தியா போய்ச் சேர்ந்தார். திரு. பெருமாளின் ஈ. பி. ஆர். எல். எவ். குழுவின் செயலாளர் திரு. கே. பத்மநாபாவும். மாகாண சபை அமைச்சர்கள் இருவர், உறுப்பினர்கள் பத்துப் பேர் நேற்றுத் திருக்கோணமலையிலிருந்து இந்திய விமானப் படை விமானத்தில் ஒரிஸா போய்ச் சேர்ந்திருக்கின்றனர். மற்றும் சில அமைச்சர்களும்- உறுப்பினர்களும் ஏற்கனவே இந்தியா போய்ச் சேர்ந்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் வரதராஜப் பெருமாள் சென்ற சில தினங்களுக்கு முன்னதாகவே இந்தியா போய்ச் சேர்ந்திருக்கலாமென்றும் கொழும்பில் செய்திகள் அடிபட்டன. ஆனால் திருமலையுடன் தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதனால் எதனையும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. திரு. பெருமாளுக்கு பாதுகாப்பளிக்க வேண்டிய கடமை தங்களுக்கு உண்டு என்பது இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒருவருடகால அவகாசம் கொடுத்து ஈழ ஜனநாயக குடியரசாகவும் பின்னர் "ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய சட்டமன்றம்" என்றும் வரதராஜப் பெருமாளினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதனால் இப்பொழுது வடக்கு - கிழக்கு மாகாண சபை செயலிழந்துவிட்டதென்றும், இப்பொழுது மாகாணசபை இயங்கவில்லையென்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இந் நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை சம்பந்தமாக ஜனாதிபதி பிரேமதாஸ'வின் அறிவித்தல் எந்நேரமும் வெளிவரலாமென்பதும் அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குப் புதிய தேர்தல் நடத்துவதையே இந்தியா விரும்புகிறது என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. மெஹ்றோத்ரா கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# இரவு தபால் ரயிலில் தபால் தரம் பிரித்தல் இல்லை

யாழ். இரவு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தபால் தரம்பிரிக்கும் பெட்டி (ரீ. பீ. ஓ.) செயற்படுத்தப்பட வில்லை என ரயில்வே பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பெட்டியில் ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே தபால் தரம் பிரிக்கப்பட்டு அந்தந்த ரயில் நிலையங்களில் தபால்கள் பொதிகளாக கொடுக்கப்படும்.

இதில் கடமை புரியும் ஊழியர்களை நியமிப்பது அவர்கள் தற்போதைய நிலையில் காங்கேசன்துறையில் தங்குவதுபோன்ற பிரச்சினைகளாலேயே இந்த சேவையை ஆரம்பிக்க தாமதமாகிறது என தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

இதனைச் சேவையில் ஈடுபடுத்த தபால் பகுதி முயற்சி எடுத்து வருவதாக கூறிய அவர் அதுவரையும் காலை யாழ்தேவி மூலமே தபால்கள் அனுப்பப்படுகின்றன என்றார்.

---

## சர்வ கட்சி மகாநாட்டில் யோகி

(யாழ்ப்பாணம்)

சர்வகட்சி மகா நட்டின் பேராளர்களின் முதலாவது செயற்குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர்யோகி (யோகரட்ணம்) கலந்து கொள்வார். இச்செயற்குழுக் கூட்டம் பதினான்காம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திலே 1989 செப்டம்பர். ஒடேக்பர் காலப் பகுதியில் ஜனாதிபதி பங்கு ...

---

# ஓடிய ரயிலில் ஏறிய வாலிபர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(வவுனியா)

நடைபெற்ற ரயில்வே விசார ...

அந்நிய நாகரீகத்தால் தென்னிந்தியத் திரைப்படங்களினால் சீர்கெட்டிருக்கும் எமது சமுதாயத்தை புதிய முறையில் உலகமே வியக்கத்தக்கதாக சீர் செய்யவேண்டும்.

எதிர்ப்பு தெரிவித்தனர். தென்னிந்தியாவிலிருந்து வரும் படங்களால் எமது மாணவரின் கல்வி பாதிக்கப்படுகிறது. எமது கலாசாரம் வளரவேண்டும். அதற்காகவே

படுத்தி தனது அதிகாரத்தை இங்கு செலுத்தலாம் என எண்ணியது அதற்காக இங்கு ஒரு கூலிப்படையும் கிடைத்தது.

ஒரு சிறிய படையைக் கொண்ட விடுதலைப் புலிகளால் பெரிய ராணுவ பலம் கொண்ட இந்தியாவை எதிர்க்க முடிந்தது என்று உலகமே வியந்துகொண்டிருக்கிறது. அத்தகைய வீரம் பொருந்திய போராட்டம் தான் எமது போராட்டம் என்றார்.

கவிஞர் காசி ஆனந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, வன்னி மாவட்ட பொறுப்பாளர் சந்திரன் ஆகியோரும் பேசினார்கள்.

இவருக்கு வயது 30 இருக்கலாம் என்றும் பச்சை நிறச் சறமும் நீல நிறச் சேர்ட்டும் அணிந்திருக்கிறார் என்றும் யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவு நேற்றுத் தெரிவித்தது. (தி)

## தபால் தரம் பிரித்தல் இல்லை

யாழ். இரவு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தபால் தரம்பிரிக்கும் பெட்டி (ரீ. பீ. ஓ.) செயற்படுத்தப்படவில்லை என ரயில்வே பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பெட்டியில் ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே தபால் தரம் பிரிக்கப்பட்டு அந்தந்த ரயில் நிலையங்களில் தபால்கள் பொதிகளாக கொடுக்கப்படும்.

இதில் கடமை புரியும் ஊழியர்களை நியமிப்பது அவர்கள் தற்போதைய நிலையில் காங்கேசன்துறையில் தங்குவதுபோன்ற பிரச்சினைகளாலேயே இந்த சேவையை ஆரம்பிக்க தாமதமாகிறது என தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

இதனைச் சேவையில் ஈடுபடுத்த தபால் பகுதி முயற்சி எடுத்து வருவதாக கூறிய அவர் அதுவரையும் காலை யாழ்தேவி மூலமே தபால்கள் அனுப்பப்படுகின்றன என்றார்.

விரும்புகிறது என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. மெஹ்ரோத்ரா கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா ரயில்வே கழிவறை துர்நாற்றம் மக்கள் அவதி

(வவுனியா)

வவுனியா ரயில்வே நிலையத்தில் அமைந்துள்ள பொது மக்கள் கழிவறை மனிதக் கழிவுகள் நிரம்பி வழிகின்றன பல மாதங்களாக வவுனியா ரயில்வே நிலையத்தில் அமைந்துள்ள கழிவறை இவ்வாறேயுள்ளது இதனால் கொழும்புக்கு செல்லும் பயணிகள் வவுனியா ரயில்வே நிலையத்தில் பலத்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இக்கழிவறைகளிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. ரயில்வேயில் அமைக்கப்பட்டிருக்கும் 'கன்டீன்' இக்கழிவு அறையிலிருந்து பத்து யார் தூரத்தில் இருக்கின்றது. இந்த நாற்றம் சகிக்காது பிரயாணிகள் கஷ்டம் அடைகின்றனர்.

இது இவ்விதம் இருக்க கழிவறையில் தேனீக்கள் தேன் கூடுகள் கட்டியுள்ளன. (வ)

## பொதுக் கூட்டம்

(சுன்னாகம்)

இன்று மாலை ஆறுமணிக்கு சுன்னாகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் பொதுக்கூட்டமும் கலை கலாச்சாரப் பிரிவினர் வழங்கும் ''நடந்துவந்த பாதை'' என்ற வில்லிசையும், ''விடியலைத் தேடுவோம்'' என்ற நாடகமும் நடைபெறும்.

## புகையிரத பயணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண புகையிரத பயணிகள் சங்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி அமைக்கப்பட உள்ளது.

இதற்கான அங்குரார்ப்பண கூட்டம் யாழ். புகையிரத அதிபர் ஆர். மயில்வாகனம் தலைமையில் நடைபெறும். (தி)

## சர்வ கட்சி மகாநாட்டில் யோகி

(யாழ்ப்பாணம்)

சர்வகட்சி மகாநாட்டின் பேராளர்களின் முதலாவது செயற்குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர்யோகி (யோகரட்ணம்) கலந்து கொள்வார். இச்செயற்குழுக் கூட்டம்பதினான்காம்திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திலே 1989 செப்டம்பர். ஒக்டோபர் காலப் பகுதியில் ஜனாதிபதி பங்கு பற்றி உசாத்துணை கூட்டங்களின் போது மேலும் ஆராயப் பட வேண்டுமென இனங்காணப் பட்ட சில முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்ந்து ஒருமைப்பாட்டுக்குவர விருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓடிய ரயிலில் ஏறிய வாலிபர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(வவுனியா)

வவுனியாவை விட்டுப் புறப்பட்ட யாழ் தேவியில் தாவி ஏறிய வாலிபர் ஒருவர் கைபிடி தளர்ந்தபோது கீழே விழுந்தார். இவர் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்று தெரிய வந்தது. அவர் தனது சாதுரிய முயற்சியால் உயிர் தப்பினார். இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது-

வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர் திரு. இராமச்சந்திரன் தனது குடும்பத்தினருடன் யாழ்தேவியில் வந்து கொண்டிருந்தார். வவுனியாவில் இறங்கிய அவர் அவசரம் அவசரமாக 3 பார்சல் சாப்பாடுகளை எடுத்துக் கொண்டு ரயிலில் ஏறினார். ஆனால் ரயிலோ வேகமாக ஓடத் தொடங்கிவிட்டது. அவர் 3 பார்சல்களையும் ரயிலில் எறிந்துவிட்டுத் தாவி ஏறினார். ஆனால் கைபிடி தளர்ந்து கீழே விழுந்தார். ஆயினும் ரயில் வண்டியில் அகப்படாது உருண்டு சாதுரியமாக அவர் உயிர்தப்பினார். இன்று நடைபெற்ற ரயில்வே விசாரணைகளில் இருந்து இவ்விபரங்கள் தெரியவந்தன.

3 பார்சல் சோறு நடைபாதை வியாபாரியிடம் 100 ரூபா கொடுத்து வாங்கினேன் என்று திரு. ராமச்சந்திரன் ''ஈழநாதம்'' நிருபருக்குக்கூறினார். ரயிலில் ஏறுங்கள் மிகுதிப்பணம் தருகிறேன் எனச் சொன்னஅந்தவியாபாரிரூபா அறுபத்துநான்கையும் தராது ஓடிவிட்டதாக திரு. ராமச்சந்திரன்கவலையுடன் கூறினார்.

## நான்கு எக்ஸ்ரே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தாம் ஒரு கடிதம் அனுப்பியதாகவும். அதில் ஒரு நிபுணரை இங்கு அனுப்பி, இவ்வியந்திரங்களைத் திருத்தித் தரும்படி கேட்டுக்கொண்டதாகவும், ஆனால் இன்றுவரை அதற்கான பதில் எதுவும் தம்மை வந்தடையவில்லை என்றும் வைத்திய சாலை நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

உள்ளூரில் இவ்வியந்திரங்களுக்கான உதிரிப் பாகங்களையோ அல்லது நிபுணர்களையோ பெற்றுக்கொள்வது கடினம். அத்துடன் உள்ளூர் நிபுணர்களைப் பெற்றுக்கொள்வதில் செலவுகளும் அதிகமாக இருப்பதால் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டி இருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இறுதியாக இவ் இயந்திரங்கள் இப்படியே இருப்பதால் மீண்டும் உபயோகப்படுத்தும் தரத்தை இழந்துவிடக்கூடிய நிலைமை இருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (லோ)

## பனைமரங்கள் அழிவதால் தீவுப்பகுதியில் வரட்சி நிலை

(தீவுப்பகுதி

தீவுப்பகுதியில் பனை மரங்கள் மிக வேகமாக தறிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு கட்டுப்பாடின்றி பனைமரங்கள் அழிக்கப்பட்டு வருவதனால் தீவுப்பகுதியில் மழை வீழ்ச்சி குன்றி குடிநீர் உவர் நீராக மாறி மக்கள் இப்பகுதியில் குடியிருக்க முடியாது வெளியேற வேண்டிய அவல நிலை ஏற்பட்டு வருவதாக அறிஞர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இதனை தடுத்து நிறுத்தி தீவுப்பகுதி மக்களை வரட்சியிலிருந்து காப்பாற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வர வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது.

தீவுப்பகுதி பாலை நிலமாக மாறு முன்னர் இந் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இடமாற்றமும் பதவியுயர்வும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றமும் பதவியுயர்வும் கிடைக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி இ. கோபாலகிருஷ்ணன் கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி டி. துரைராஜா ஆகியோர் மேற்படி இடமாற்றமும் பதவி உயர்வும் பெறுவதில் இடம் பெறுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## தேடுதலுக்கு உத்தரவு!

(கொழும்பு)

இம்மாதம் முதலாம் திகதியுடன் செல்லுபடியற்றதாகப் பட்டுள்ள தற்காலிக அனுமதிப்பத்திரங்களில் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள கடிதங்களுடன் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் எவரானாலும் அவற்றை இதுவரை ஒப்படைக்காவிட்டால் தேடுதல் நடாத்தி அவர்களைக் கைது செய்யும்படி பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் சுப்பிரின்டன்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## தீய சக்திகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் பேசுகையில், இந்திய இராணுவம் இங்கு வந்தது தமிழர் முஸ்லிம் மக்களைப் பாதுகாக்கவில்லை. அவர்களின் தேசியத்தையும், விடுதலைப் புலிகளையும் அழிக்கவே வந்தது எனக்குறிப்பிட்டார். மேலும் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களுக்கிடையில் பேதங்களை உருவாக்கி போராட்ட பலத்தை மழுங்கடிக்கச் செய்தது. இந் நிலையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமது உரிமைக்கான போராட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் இணைந்து போராட வேண்டும் என்றார்.

காசியானந்தன் பேசுகையில் நான் பெருமாளைப் பார்த்துக்கேட்கிறேன். ஒரிஸா உங்களுக்கு றோக்காரர் தந்த பரிசா? என்றும் கேள்வி எழுப்பினார்.

## புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது கூறியதாவது:

புலிகள் ஜனநாயக அரசியல் வழிக்கு வந்த போதிலும், மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தும்நிலையில் உள்ளனர்.

தமிழ் மக்களின் முந்திய தலைமை சரியான வழியில் அமைந்த தலைமை அல்ல. இதனால் தமிழ் மக்கள் நெருக்கடியை எதிர்நோக்கிய காலத்தில் அவர்கள் மக்கள் செல்வாக்கையிழந்து, மக்களிடமிருந்து வெளியேற்றப்பட்டனர்.

யோகரத்தினம் ([illegible]) பேசுகையில்,

முஸ்லிம்களின் வே[illegible] கோள்களும், அபிலாசை[illegible]ளும் விடுதலைப் புலிக[illegible]ல பூர்த்தி செய்யப்படும். முஸ்லிம்களது தனித்துவம் எம்மால் பேணப்படும். கடந்த காலத் தலைமைத்துவம் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. இறுதியில் அவர்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டார்கள். தாம் சொன்னதைச் சாதிக்கக் கூடியவர்கள் என்றார்.

## மற்றவர் கையால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பமும் தானும் அடைக்கலம் புகப்போகும் இடத்தை பெருமாள் கூற மறுத்தாராயினும், பிந்திக் கிடைத்த செய்திகளின்படி பெருமாளின் தோழர்களும், நெருங்கிய சகபாடிகளும் ஆந்திரப் பிரதேசத்துக்கும் மேற்கு வங்காளத்துக்கும் இடையிலான ஒரிஸா மாநிலத்தில் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

## போராட்டத்திற்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும். பெண்கள் மென்மையானவர்கள். அவர்களால் ஆயுதம் தாங்கிப் போராட முடியாது என்ற நிலையை நாம் மெல்லத் தகர்த்து வருகிறோம். எம்மால் நிலைத்துப் போராட முடியுமென்[illegible]தைப் பல சாதனைகள் [illegible]லம் நிரூபித்து விட்டோம். [illegible]ந்நிய இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கில்தான் நாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கின்றோம்.

எமது இலட்சியம் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் தான் எம்மில் பல போராளிகள் போராடி வீரமரணமடைந்தார்கள். எமக்கு, எமது இலட்சியத்தில் இன்றும் நம்பிக்கையுண்டு. அதனால் நாம் போராடுகின்றோம் என்று தெரிவித்தார். (தி)

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வெவ்வேறு இடங்களில்மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி காயங்களுக்குள்ளான இருவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலியைச் சேர்ந்த ரீ. செல்வராஜா (26) கொட்டடியைச் சேர்ந்த ஜீ. மகாலிங்கம் (32) என்று வைத்தியசாலை பொலிஸ் வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது (தி)

## கொள்ளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண் பிடிபட்டார். அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது.

## சடலங்களை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பொறுப்பேற்கப்படும் சடலங்களுக்கு வழமையான சட்டப்படி மரண விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் எனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கோரியுள்ளார்.

இவர்களை மொழி, கலாசாரம் என்பவற்றில் வேறுபட்ட பழக்கவழக்கங்களையுடைய ஒரிஸாவுக்கு அனுப்பியது மிகவும் வருந்தத்தக்கது எனவும் அவர் தமது மசஜரில் குறிப்பிட்டார். மேலும் அவர்களைத் தமிழ் நாட்டிற்குள் திரும்பவும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார்.


## சமையலாள் தேவை

சைவ, அசைவ உணவு வகைகள் (சைனீஸ் முறைப்படி) சுவையுடன் சமைப்பதற்கும், பேக்கறி வேலையில் அனுபவமுள்ளவர்களும் உடன் தேவை. 14 03.1990 அன்று காலை 9.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடையில் பின்வரும் விலாசத்திற்கு நேரில் வரவும்.

இல. 11, புதிய கடைத்தொகுதி
(நல்லூர் இந்துவிடுதி உணவுச்சாலைக்கு அருகாமையில்)
நல்லூர்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.